The
Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே
ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11-16.)

புத்தகம் 16. | பெப்ரவரி 1918. | இலக்கம் 2.

LITURGICAL AND HOMILETIC NOTES.

தேவசடங்கையும் தேவவாக்கியத்தையும் பற்றிய குறிப்புகள்.

கர்த்தர் பிறந்த திருநாளைக் கொண்டாடின பிறகு நாம் கொண்டாடும மகா பெரிய திருநாள் கர்த்தர் உயிர்த்த திருநாளாகும். ஆகமனகாலத்தை எப்படி திருச்சபை கர்த்தர் பிறந்த திருநாளுக்கு ஆயத்தகாலமாக ஏற்படுத்தியுளதோ அப்படியே தபசுகாலத்தையும இந்தத் திருநாளுக்கு ஆயத்தகாலமாக ஏற்படுத்தியுளது. தபசுகாலம் விபூதித் திருநாளன்று துவக்கமாகி அர்ச்சியசிஷ்ட வாரத்தில் வரும் பெரிய சனிக்கிழமையோடு முடிவுபெறுகிறது. விபூதித் திருநாளிலிருநது கர்த்தர் உயிர்த்த திருநாள் வரையிலுமுள்ள நாட்கள் நாற்பத்தியாறு நாட்களாயினும், சரியாய் நாற்பது நாட்களையே திருச்சபை தபசு நாட்களாக அநுசரிக்கக் கற்பிக்கின்றது. அதிகமாயுள்ள ஆறு நாட்களும் தபசுகாலத்தின் ஆறு ஞாயிறுகளாகும. அந்த நாட்களில ஒருபொழுதை யாவது சுத்தபோசனத்தையாவது அநுசரிக்க திருச்சபை நமக்குக் கட்டளை யிடுவதில்லை. சரியாய் நாற்பது நாட்களைத் தபசு நாட்களாக அநுசரிக்க திருச்சபை நமக்குக் கற்பிப்பதற்குக் காரணம் யாதெனில், கிறீஸ்துவர்களான நாம் உபவாச விஷயத்தில் நாற்பது நாள் ஒரு சந்தியா யிருந்த நமது கர்த்தரைப் பினபற்றி நடக்கவேண்டுமென்பதைப் பற்றியேயாம். திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டபோதே நாற்பது நாள் உபவாசமும் அப்போஸ்தலர்களால் ஏற்படுத்தப்பட்டது. இவ்விஷயத்தில் பூர்வீக கிறீஸ்துவர்கள் எவ்வளவு பக்தி வைராக்கியமுள்ளவர்களா யிருந்தார்களென்றால், விபூதித் திருநாள் வருவதற்கு முந்தியே தஙகளுடைய உபவாச நாட்களைத துவக்கி விடுவார்கள். இவர்களிற் சிலர் சிலவிடங்களில் ஒவ்வொரு வாரத்திலும் இரண்டு மூன்று நாட்களில் உபவாசத்தை நிறுதது மற்ற நாட்களில் அதை யநுசரித்து, கர்த்தர் உயிர்த்த திருநாள் வருவதற்குள்ளாக தங்களுடைய நாற்பது நாள் ஒருபொழுதையும் முடித்துக்கொள்ளும் வழக்கமுடையவர்களா யிருந்தார்கள். ஆனதுபற்றியே, இத்திருநாளுக்கு இன்னும் எழுபது

நாளிருக்கையில் சிலரும், அறுபது நாளிருக்கையில் சிலரும், ஐம்பது நாளிருக்கையில் சிலரும், ஒரு சந்தியா யிருக்கத் துவக்கினபடியால் விபூதித் திருநாளுக்கு முன் வரும் மூன்று ஞாயிற்றுக்கிழமைகளும் 70-ம் நாள் ஞாயிறு (Septuagesima Sunday) 60-ம் நாள் ஞாயிறு (Sexagesima Sunday) 50-ம் நாள் ஞாயிறு (Quinquagesima Sunday) என்று முறையே அழைக்கப்பட்டு வருகின்றன. இந்த மூன்று ஞாயிற்றுக் கிழமைகளையும் அவைகளுக் கிடையிலுள்ள நாட்களையும் பரிசுத்த தபசுகாலத்துக்கு ஆயத்தம் செய்யும் நாட்களாக நாம் அநுசரிக்க திருச்சபை கோருகிறது. மேலும் அந்த மூன்று ஞாயிற்றுக் கிழமைகளிலும், தபசுகாலத்திய ஞாயிற்றுக்கிழமைகளில், பூசையில் நடைபெறும் சாங்கிய சடங்குகளைச் செய்யவும், ஜெபிக்கும்ஜெபங்களை ஜெபிக்கவும், தபசுக்கடையாளமாக ஊதா பூசை வஸ்திரத்தை தரித்துக்கொள்ளவும் திருச்சபை குருக்களுக்குக் கற்பித்திருக்கிறது. ஆனபடியால் 70-ம் ஞாயிறிலிருந்து விபூதித் திருநாள் வரையிலுமுள்ள நாட்கள் தபசுகாலத்துக்காக ஆயத்தஞ் செய்யும் நாட்களென்று கிறீஸ்துவர்களான நாம் அறிந்து, அந்நாட்களில் மெய்யான தபசு செய்வதற்கான தேவானுக்கிரகத்தை நமக்குச் சர்வேசுரன் கொடுத்தருள அவரை இரந்து மன்றுடுவோமாக.

***

தபசு காலத்தில் நாற்பது நாள் உபவாசத்தை கிறீஸ்துவர்கள் அநுசரிக்க வேண்டுமென்பதே திருச்சபையின் கட்டளை. இக்கட்டளைப்படியே ஐரோப்பா முதலிய குளிர் நாடுகளில் நாற்பது நாள் உபவாசத்தை அனுசரித்து வருகிறார்கள். ஆனால் நம்முடைய இந்தியா தேசத்தில் உஷ்ண முதலிய காரணங்களை முன்னிட்டு தபசுகாலத்தில் வரும் ஏழு வெள்ளிக்கிழமைகளிலும் பெரிய சனிக்கிழமையிலும் ஒருபொழு தநுசரிக்க திருச்சபை நமக்கு கற்பித்திருக்கின்றது. ஒரு பொழுதென்றால் ஒரே வேளை சாப்பிடுவது. பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறபடி யூதர்களும் ஒருபொழுது நாளில ஒரே வேளை தான் சாப்பிட்டுவந்தார்கள். இவ் வழக்கத்தை நம்மைச் சுற்றிலுமிருக்கிற அஞ்ஞானிகளும் அநுசரித்து வருகிறதை நாம் பிரத்தியட்சமாய்ப் பார்த்துவருகிறோம். ஆகையால் ஒருபொழுதிருக்கக் கடமைப்பட்டுள்ள யாவரும்—அதாவது 21-பிராயத்துக்குமேற்பட்டவர்களும் 60-பிராயத்திற் குட்பட்டவர்களும்—ஒருபொழுது நாட்களில் ஒரே வேளை சாப்பிட்டு ஒருபொழு தனுசரிக்கவேண்டியது. ஆயினும் இஷ்டமானவர்கள் இன்னோர் வேளை வழக்கமாய்ச் சாப்பிடும் சாப்பாட்டில் மூன்றிலோர் பாகமளவு சாப்பிட உத்தரவுண்டு. இந்த அநுமதியை அநேகர் துர்ப்பிரயோகம் செய்துகொள்ளுகிறார்கள். சில்லறை போசனமென்று சொல்லி வாய்க்கு உருசியான பலகார வகைகளைச் செய்துவைத்துக்கொண்டு அளவுக்கு மிஞ்சி சாப்பிட்டு ஒருபொழுது கடமையை நிறைவேற்றாமல் பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறார்கள். அவர்களதைச் சாப்பிட்டபோதிலும் மூன்றிலோர் பாகத்திற்குமிஞ்சிப்போகாமலிருக்க எச்சரிக்கை எடுத்துக்கொள்ளக் கடவார்களாக. தபசுகாலத்தில், இறைச்சி சாப்பிட திருச்சபை உத்தரவளித்திருக்கிற வேளைகளில் தவிர, மற்ற வேளைகளில் அதைச் சாப்பிடலாகாது.

***

நமது இரட்சகர் நாற்பது இரவும் பகலும் சுத்த உபவாசமாய் இருந்தாரென்று சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பரிசுத்தரான இவர் இப்படி அல்லும் பகலும் உபவாசமா யிருந்ததற்குக் காரணம் நம்முடைய பாவாக்கிரமங்களுக்காக உத்தரிக்க வேண்டுமென்பதைப் பற்றியல்லவா? ஆனால் இவர் அதற்காக நாற்பதுநாளைத்தெரிந்துகொள்வானேன்? அவருக்குச் சித்தமிருந்திருந்தால் நாற்பது நாளுக் கதிகமாக அல்லது குறைவாக உபவாசமா யிருந்திருக்கலாம். அப்படிக்கின்றி நாற்பது நாளைத் தெரிந்துகொண்டது ஏன்? நாம் சிந்தனை, வாக்கு, கிரிகை, நமது அந்தஸ்தின் கடமைகளை நிறைவேற்றாமற் போதல் ஆகிய இந் நான்கு விதங்களினால் சர்வேசுரனுடைய பத்துக்கற்பனைகளை மீறி நடக்கிறோம். நாலு பத்து நாற்பதாகின்றது, ஆகையாற்றான் நாற்பது நாள் உபவாசமா யிருக்க அவருக்குச் சித்தமுண்டாயிற்று.

***

திவ்ய இரட்சகரான நமதாண்டவர் வனாந்தரத்தில் ஒதுங்கியிருந்து உபவாசமாயிருந்தாரென்ற விஷயம் நமக்குத் தெரியாததல்ல. அவர் வனாந்தரத்துக்குப் போகாமல் பெத்திலேம் ஊரிலாவது, நசரேத் ஊரிலாவது, ஜெருசலேமிலாவது உபவாசமா யிருந்திருக்கலா மல்லவா? ஆனால் அவர் வனாந்தரத்திற்குப் போகக் காரணமென்ன? நாம் செய்யும் நற்கிருத்தியங்களை பஹிரங்கப்படுத்தாமலிருக்க எச்சரிக்கை யெடுத்துக்கொள்ள வேண்டுமென்று நமக்குக் கற்பிக்கும் பொருட்டேயாம். தான் செய்யும் நற்கிருத்தியங்களை எல்லோரு மறிந்து தன்னைப் புகழ்ந்து கொண்டாடவேணுமென்று ஆசிக்கிற எவனும் தன்னுடைய சம்பாவனையைப் பெற்றுக்கொள்ளுகிறானென்று சொல்லத் தேவையில்லை. ஆனபடியால் நமதாண்டவரும் "நீங்கள் மனிதராற் காணப்படத்தக்கதாக அவர்களுக்கு முன்பாக புண்ணியக் கிரியைகளைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையா யிருங்கள். இல்லாவிட்டால் பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவினிடத்திற் சம்பாவனையை யடையமாட்டீர்கள்" (மத்தேயு. VI, 1) என்று திருவுளம் பற்றி யிருக்கிறார். ஒருபொழுது விஷயத்தில் இதை இன்னும் நமக்கு வற்புறுத்திக் காட்ட நமது ஆண்டவர் சொல்லியிருப்பதாவது:—"நீயோ உபவாசமா யிருக்கிறபோது உபவாசமா யிருக்கிறாயென்று மனுஷருக்கல்ல, அந்தரங்கத்தி லிருக்கிற உன்னுடைய பிதாவுக்கே காணப்படும்பொருட்டு உன் சிரசையுந் தைலத்தினால் பூசு, உன் முகத்தையுங் கழுவு. அப்போது அந்தரங்கத்திற் காண்கிற உன் பிதாவானவர் உனக்குச் சம்பாவனையை அளிப்பார்" (மத்தேயு VI. 17—18) என்பதேயாம். மேலும் நமது கர்த்தர் வனாந்தரத்திலொதுங்கி உபவாசமா யிருந்ததினால் நாமும் தபசுகாலத்தில் ஏகாந்தத்தை நாடிப்போய் உபவாசஞ் செய்யவேண்டுமென்று நமக்குக் கற்பிக்கிறார். அதெப்படியென்றால், இப் பிரபஞ்ச இன்ப சுகங்களின்மட்டில் நாம் வைக்கிற பற்றுதல்களைச் சாதாரண நாட்களில் ஒறுப்பதை விட, தபசுகாலத்தில் அதிகமாய் ஒறுத்து நம்முடைய ஆத்தும காரியங்கள்மட்டில் மிக்க கவலைகொள்ளவேண்டும். ஆனபடியால்தான் திருச்சபையும் தபசுகாலத்தில் கலியாண ஆடம்பரங்களுக்கு உத்தரவளியாமல் ஜெபதபம், தான தர்மம், ஞானவாசகம், பிரசங்கம், சிலுவைப்பாதை, அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்து நன்மை வாங்குதல் இவை முதலான ஞானகாரியங்களைக் கவனிக்கப் புத்தி சொல்லுகிறது. ஐயோ! எத்தனையோ கிறீஸ்துவர்கள் சாதாரணகாலத்தில் எப்படி நன்றாய்க் குடித்துச் சாப்பிட்டு உல்லாசித்து வருகிறார்களோ, அப்படியே பரிசுத்த தபசுகாலத்திலும் யாதொரு ஒறுத்தல் உபவாசத்தையும் அநுசரியாமல் உல்லாசித்து வருகிறார்கள்.

***

திருச்சபையின் திருநாட்கள் அட்டவணைப்படி மாறுந் திருநாட்களென்றும் மாறாத் திருநாட்களென்றும் இருவகை திருநாட்களுண்டு. எப்போதும் அதேநாளில் வரும் திருநாட்கள் மாறுந் திருநாட்களென்றும், எப்போதும் அதே தேதியில் வரும் திருநாட்கள் மாறாத் திருநாட்களென்றும் நாம் அறிந்துகொள்ளவேண்டியது. மாறுந் திருநாளுக்கு உதாரணம் நாளது மாதம் 13-ந் தேதி புதன் கிழமையில் வரும் விபூதித் திருநாள். மாறாத் திருநாளுக்கு பிரதி வருஷமும் டிசம்பர்மீ 25-ந் தேதியில் கொண்டாடப்படும் கர்த்தர் பிறந்த திருநாள் உதாரணமாகும்.

***

விபூதித் திருநாளன்று முந்தின வருஷம் குருத்து ஞாயிற்றுகிழமையில் மந்திரிக்கப்பெற்ற குருத்துகளைச் சுட்டெரித்துக் கிடைத்த சாம்பலைக் குருவானவர் மந்திரித்து, அதைக் கிறீஸ்துவர்களின் நெற்றியில் சிலுவை அடையாளமாக வரையும்போது "மனிதா, நீ தூசியாயிருக்கிறாய், மறுபடியுந் தூசியாய்ப் போவாயென்று நினைத்துக்கொள்" என்கிறாரல்லவா? இத் திருநாளன்று நடத்தப்படும் இச்சடங்கிற்கு அருத்தமென்ன? திருச்சபையானது குருத்தோலையை வெற்றிக்கும், சந்தோஷத்துக்கும், சமாதானத்துக்கும் அறிகுறியாய் உபயோகித்துக்கொள்ளுகிறது. ஆனது பற்றியே, சில மோட்சவாசிகள் தங்கள் கையில் குருத்தோலையைப் பிடித்த மேரையாய்ச் சித்திரிக்கப்பட்டிருக்க நாம் படங்

களில் காண்கிறோம். அவர்கள் இப்பிரபஞ்ச சீவியத்தில் தங்களுடைய சத்துருக்களான உலகம், பசாசு, சரீரத்துடன் போராடி ஜெயங்கொண்டு இப்போது மோட்சத்தில் சந்தோஷமாயும் சமாதானமாயு மிருக்கிறார்களென்று அவர்கள் கையிலுள்ள குறுத்தோலை நமக்குத் தெரியச் செய்கிறது. இவ்வாறு குறுத்தோலைவெற்றிக்கும், மோட்ச பாக்கியத்துக்கும் அடையாளமா யிருக்கையில், குறுத்தோலையின் நீறு அல்லது சாம்பல் எதற்கடையாளமென்றால், தபசுக் கடையாளமாகும். அதெப்படி யெனில், சுட்டெரிக்கப்பட்ட குறுத்தோலையானது மறுபடியும் பசுமையான குறுத்தோலையாவது அசாத்தியம். அப்படியே பாவத்தினால் மோட்ச பாக்கியத்தை யிழந்துபோன நாம் மறுபடியும் அந்த மோட்ச பாக்கியத்தைச் சுதந்தரித்துக்கொள்வது அசாத்தியம். என்றாலும் சுட்டெரிக்கப்பட்ட குறுத்தோலை முற்றுமே ஒன்றுமில்லாமையாய்ப் போகாமல் அல்லது சுத்த சூனியமாகாமல் சாம்பலாயிருக்கின்றதல்லவா? அதுபோலவே, நாமும் கெட்டுப்போன சம்மனசுக்கள் மோட்ச பாக்கியத்துக்கு விலக்கப்பட்டது போல விலக்கப்படாமல், சாம்பலுக் கடையாளமாயிருக்கும் தபத்தைக் கையாடிவருவோமானால், நமது இரட்சகர் கொண்டு வந்த இரட்சண்ணியத்தில் பங்கு பற்றி, மோட்ச பாக்கியத்தைச் சுதந்தரித்துக் கொள்வோம். ஆம், சாம்பலானது பாத்திரங்களை விளக்கித் துலக்க உபயோகப்படுகின்றது. அப்படியே தவக்கிரித்தியங்களான ஜெபத்தியானம், தானதர்மம், ஒறுத்தல் உபவாசம் முதலியவை நம்முடைய பாவக்கறைகளைப்போக்க உபயோகப்படும். சாம்பலானது பூமிக்கு எருவாக உபயோகப்படுத்தப்பட்டு செடிகளையும் மரங்களையுஞ் செழிக்கச் செய்து அவைகள் கனிகள்கொடுக்கக் காரணமாயிருக்கின்றது. தவக்கிருத்தியங்களும் நம்மை சாங்கோபாங்கத்தில் ஓங்கி வளரச்செய்து நற்கனிகளான புண்ணிய கிருத்தியங்களை நாம் செய்ய காரணமாயிருக்கின்றன. நம்முடைய பாவங்களைப்பற்றி நம்மைத் தூசிக்குச் சமானமாய்த் தாழ்த்தி இம்மாதத்தில் துவக்கும் தபசுகாலத்தில் நாம் அனுசரிக்கவேண்டிய தவக்கிருத்தியங்களைப் பிரமாணிக்கமாய் அனுசரித்து தவம் புரிவோமாக.

(தொடரும்.)

SISTER MARY OF THE DIVINE HEART.

திவ்ய இருதயத்தின் மரியம்மாள்.

(முன் தொடர்ச்சி)

அக்காலத்தில் நல்ல ஆயன் சபையானது ஐரோப்பாவின் பற்பல தேசங்களில் பரவி அநேக மடங்களை ஸ்தாபித்து திருச்சபைக்காக மெத்த செல்வாக்குடன் உழைத்து வந்தது. 1894-வருஷத்தில் போர்த்துகால் தேசத்திலும் நல்ல ஆயன் சபை மடங்கள், லிஸ்பன் நகரில் ஒன்றும், ஒப்போர்தோவில் மற்றொன்றும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. அவ்வருஷத்தில் ஜனவரி மாதம் மன்ஸ்டர் நகர் மடத்தின் முதலாளியம்மாள். ஆன்கர்வலிலிருந்த தாய்மடத்தின் அதிசிரேஷ்ட தாயாரிடமிருந்து ஓர் நிருபம் வரப்பெற்றனள். அதில் திவ்ய இருதயத்தின் மரிசகோதரியை லிஸ்பனுக்கு உடனே அனுப்பிவைக்கும்படியாக எழுதியிருந்தது. ஏனெனில் லிஸ்பனிலிருந்த நல்ல ஆயன் மடத்தின் முதலாளிக்கு உதவிதாயாராக ஒருவரை நியமிக்கவேண்டியதாயிற்று. அதிசிரேஷ்டதாயார் திவ்ய இருதயத்தின் மரிசகோதரியின் அருமையான குணங்களையும் சிறந்த புண்ணியங்களையும் பற்றி ஏற்கெனவே அறிந்திருந்தபடியால், அவள் சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்துக்காக பெரிதும் உழைப்பாள் என்று நிச்சயித்து, இவ்வேலைக்கு அவளைத் தெரிந்துகொண்டாள். இச்செய்தி மடத்தில் பிரஸ்தாபமாகவே, சகோதரிகளும் பச்சாத்தாப பாலரும் மெத்த துயரமடைந்தார்கள். எல்லோரையும்விட அதிக வருத்தமடைந்தவள் மரிசகோதரியே. ஆனால் சர்வேசுரனுடைய சித்தத்தை நிறைவேற்றுவது தன்னுடைய பாக்கியம் என்று தன்னைத் திடப்படுத்திக்கொண்டு, முகமலர்ச்சியோடு இருந்தாள். மடத்தின் கன்னியர்களையும்

பச்சாத்தாப பாலர்களையும் தேற்றி உற்சாகப் படுத்தினுள்.

ஜனவரி மாதம் 24-ம் தேதி சகோதரிகளும் பச்சாத்தாப பெண்களும் கண்ணீர்சிந்தி பிரலாபித்துக்கொண்டிருக்க மரிசகோதரி, துறவற ஜீவியத்தின் பாக்கியத்தை முதல்முதல் சுகித்தனுபவித்த தன் மடத்தை விட்டுப் பயணப்பட்டாள். ஆனல் அதிசிரேஷ்ட தாயார் அவளைக் காண விரும்பினதைப்பற்றி மரிசகோதரி ஆன்கர்ஸ் மடத்துக்கு முதல்முதல் போகவேண்டியதாயிற்று. அவளுடைய பெற்றோர் ஆன்கர்ஸ் வரையில் அவளுக்குத் துணையாகச் சென்றார்கள். இப்பிரயாணத்தில் கொலோன் பட்டணத்தில் தங்கியிருந்து, நல்ல ஆயன் சபை மடத்தையும், அந்நகர் மேற்றிராசன கோயிலையும், அதில் பூஜிதமாய்க் கட்டப்பட்டிருந்த மூன்று இராசாக்கள் கல்லறையையும் சந்தித்து ஆறுதலடைந்தாள். மறுநாள் இரவு மரிசகோதரி பாரிஸ்பட்டணம் வந்து சேர்ந்தாள். அங்கு ஜெயநாயகியின் கோவிலையும் மொம்மார்திற் (Montmartre) ஆலயத்தையும் சந்தித்து வெகு உருக்கமான பத்தியோடு வேண்டிக்கொண்டாள். மொம்மார்திற் ஆலயத்தில் சிறப்பலங்காரமாய் ஜோடிக்கப்பட்ட பீடத்தின்மேல், அழகுசோபனம் பொருந்திய சேசுவின் இருதய சுரூபமானது அமைக்கப்பட்டிருந்தது. இக்காட்சியைக் காணவே, மரியின் இருதயம் சந்தோஷத்தால் பூரித்தது. இங்கு அவள் தனது திவ்விய பத்தாவோடு சம்பாஷித்து ஆத்துமங்களின் இரட்சண்ணியத்துக்காகத் தன்னை முழுதும் பலியாகத் தத்தம் செய்தாள். மன்ஸ்டரைவிட்ட மூன்று நாளுக்குப்பின் மரிசகோதரி ஆன்கர்ஸ்நகர் மடம் வந்துசேர்ந்தாள். அதிசிரேஷ்ட தாயார் மரியைப் பிரிய வாஞ்சையாய் வரவேற்றாள். மரியும் அவளிடம் பூரண விசுவாசத்தையும் அன்பையும் காட்டினுள். இவ்விடத்தில் அவளுடைய பெற்றோர் அவளை விட்டுப் பிரிந்தார்கள். இது மரிக்கு மெத்த வியாகுலத்தைத் தந்தது. சிலதினங்கள் ஆன்கர்ஸ் மடத்திலே தங்கியிருந்து அதிசிரேஷ்ட தாயாரின் கருத்துகள் நோக்கங்களையும் ஆசை விருப்பங்களையும் அறிந்து கொண்டாள். மரி லிஸ்பனுக்குப் போய்ச் சேர்வதற்குமுன் ஸ்பேயின் தேசத்திலுள்ள பெர்பிக்னன், பார்ஸெலோனு, மன்ரேசா என்னும் ஊர்கள் மார்க்கமாய்ப் போக நேரிட்டது. இந்நகர்களில் சிலதினங்கள் தங்கினுள்.

அர்ச். இஞ்ஞாசியார், அர்ச். சவேரியார், அர்ச். தெரேசம்மாள் இவர்களுடைய இராச்சியத்தில் தங்கியிருந்து பிரயாணம் நடத்துவது அவளுக்கு மெத்த பிரியமாய் இருந்தது. அவர்களுடைய பாதுகாவலில் தன்னை ஒப்படைத்து அவர்களுடைய சகாயத்தை மன்றாடினுள். அவர்களுடைய புண்ணிய மாதிரிகையைத் தானும் கண்டு பாவிக்க பெரிதும் ஆசித்தாள். மன்ரேசாவில் அர்ச். இஞ்ஞாசியார் தேவதாயின் தரிசனத்தைப்பெற்று, அவளுடைய விசேஷ கிருபையால் ஞான முயற்சிகளை எழுதி யர்ச்சித்த குகையை அவருடைய செல்வ புத்திரர்கள் ஓர் ஆலயமாக மாற்றி வெகு பூஜித வணக்கமாய் வைத்திருந்தார்கள். அதனை மரிசகோதரி போய்த் தரிசிக்கப் பாக்கியம்பெற்றாள். அர்ச். இஞ்ஞாசியார்பேரில் அவளுக்கு மெத்த பக்தி. திருச்சபையின் அபிவிர்த்திக்காக மெத்த சிலாக்கியமாய் உழைத்து வருகிறதும் அவரால் ஏற்படுத்தப்பட்டதுமான சேசு சபையை வெகுவாய்ப் புகழ்ந்து மதித்து வந்தாள். மன்ரேசா கோவிலில் அவள் பாவசங்கீர்த்தனம் செய்து விசேஷ ஆறுதலையும் மேலான வரப்பிரசாதங்களையும் பெற்றாள்.

அவள் செய்த பிரயாணத்தில் இவ்விடத்தில் தங்கியிருந்தகாலம் அவளுக்கு விசேஷித்ததாயும் முக்கியமானதாயும் தோன்றிற்று. இங்கு சேசு சபை குருக்கள் அவளுக்குத் தந்த ஆலோசனைகளால் அவள் ஆத்துமத்துக்கு மெத்த பிரயோஜனமும் நன்மையும் உண்டாயிற்று. சர்வேசுரன் இவ்விடத்தில் தமது சித்தத்தை வெகு துலக்கமாய் அவளுக்கு வெளிப்படுத்தினர். "சர்வேசுரனுடைய சித்தத்தை இங்கு அறிந்து கொண்டதைப்போல், அவ்வளவு தெளிவாய் ஒருபோதும் நான் கண்டறிந்ததில்லை" என்று மரிசகோதரி எழுதிவைத்தாள். "இவ்விடத்திலிருக்கும்போது பாவிகளின் பேரிலும் பரித்தியாகத்தின் பேரிலும் என் ஆத்துமத்தில் அதி வேகமான ஆசை எழும்பினது. நமதாண்டவர் சிலுவையையும் அதின் சர்வ பாரத்தையும்கூட என்னிடம் ஒப்புவித்தார். அதை நான் பரிசுத்த சிநேக வைராக்கியத்தோடு ஏற்றுக்கொண்டேன். அச்சிலுவை யாதென்றால் ஒப்போர்தோவில் எனக்கு குறிக்கப்பட்ட உழைப்புகளே" என்னும் குறிப்பை எழுதிக்கொண்டாள்.

மரிசகோதரி ஏறின புகை வண்டி நடு இராத்திரியில் அவில்லா நகரில் வந்து நின்றது. அவ்வூரின் பெயரைக் கேட்டவுடனே அவள்

வண்டியை விட்டிறங்கி அர்ச். தெரேசம்மாள் வாழ்ந்த புண்ணிய பூமியை மிதித்து, நிலா வெளிச்சத்தில் அவ்வூரைச் சுற்றிலும் பனியால் மூடப்பட்டிருந்த உயர்ந்த மலைகளைத் தரிசித்து ஆனந்தங்கொண்டாள். அவில்லாவின் பக்திசுவாலகருக்கொத்த கன்னிகாரத்தினம் அம்மலைகளின் வனப்பையும் சிறப்பையும் எத்தனையோதரம் கண்டு களிகூர்ந்து அதிசயித்திருக்க வேண்டுமென்றும், அவைகளின் சிருஷ்டி கர்த்தாவை எம்மாத்திரம் உருக்கத்தோடு நேசித்திருக்க வேண்டுமென்றும் சிந்திக்கவே, மரியின் இருதயம் தேவசிநேகத்தால் பூரித்து மகிழ்ந்தது. பிரபஞ்ச காரியங்களையெல்லாம் வெறுக்கவும், நமது நேசத்துக்கு முற்றும் பாத்திரமுள்ளவரும், நம்மை முற்றும் திருப்தியாக்கக் கூடியவருமாகிய சர்வேசுரன் ஒருவரையே இடைவிடாமல் நோக்கிச் செல்லவும் அவருடைய அநுக்கிரகத்தைப் பெற்றுக்கொடுக்க, அர்ச். தெரேசம்மாளின் உதவியை மன்றாடினுள். பிறகு சிலமணி நேரத்துக்கெல்லாம் போர்த்துகால் தேசத்தின் எல்லைகளைக் கடந்து ஒப்போர்தோவுக்கு வந்துசேர்ந்தாள். அங்கு லிஸ்பன் மடத்து முதலாளியம்மாள் அவளுடைய வருகைக்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

மரிசகோதரி வந்து இறங்கினதும், அவளை அன்பாய் அரவணைத்து வரவேற்றுக்கொண்டார்கள். மரிசகோதரிக்கு இங்கு செய்யப்பட்ட உபசரணைகளும் மரியாதைகளும், மன்ரேசாவில் அவளுக்கு அளிக்கப்பட்ட வரங்களின் ஞாபகமும், போர்த்துகால் தேசத்தின் வனப்பும் வளமையும், அவளைக் குதூகுலப்படுத்தின. (Douro) தௌரோ என்ற கணவாயின் வனப்பும், அதில் எங்கும் எதேஷ்டமாய்ச் செழித்தோங்கி வளர்ந்த ஒலிவை, வாதுமை மரங்களும், ஒப்போர்தோவின் பூஞ்சோலைகளும், மாதுளம், கிச்சிலி பழங்கள் மலிந்த தோப்புகளும், கமகமவென்று நறுமணம் வீசும் புஷ்பங்களின் சிறப்பும் செல்வமும், அவளுக்கு இரமணிய காட்சியாய் இருந்தது.

ஒப்போர்தோவில் அவள் சிலநாள் தங்கியிருந்து லிஸ்பன் பட்டணத்துக்குச் சென்றுள். இங்கு அவளுடைய கண்களுக்குத் தென்பட்டதெல்லாம் இரம்மியமாய்த் தோன்றிற்று. நல்ல ஆயன் மடத்தின் கட்டுகோப்பு, ஓர் குன்றின் மேல் விசாலமான பூஞ்சோலையின் மத்தியில், வசதியான் இடத்தில் கட்டப்பட்டிருந்தது. அதனருகே ஓடின தாகஸ் நதியின் அமைப்பும், அவ்விடத்திய ஆகாயத்தின் பரிசுத்தமும், மடத்து கட்டிடத்தின் அழகிய தோற்றமும், அதில் சதா விளங்கின அமைதியும், சமாதானமும், அதின் சிறிய கோவிலும், கன்னியர் அதைச் சோடித்து சிறப்பித்து வைத்திருந்த மாதிரியும், மரிசகோதரிக்கு மன திருப்தியையும் மகிழ்ச்சியையும் தந்தன. இம்மடத்தில் மரிசகோதரி முதலாளியம்மாளுக்கு உதவி தாயாராக நியமிக்கப்பட்டாள். இவ்வலுவலோடுகூட பச்சாத்தாப பாலரின் முதல் எஜமானியின் வேலையையும் நடத்தி வந்தாள். அவள் பார்வையில் 60 பாலர் வரையில் இருந்தார்கள். இவர்கள் சாதாரணமாய் நற்குணமும் அமைதியு முடையவர்களாயிருந்தாலும், சிலருடைய சோம்பலையும் துடுக்குத்தனத்தையும் பலமுறை பொறுமையாய்ச் சகித்துக்கொள்ள வேண்டியதாயிருந்தது. ஒரு தடவை பச்சாத்தாப பெண்களில் ஒருவள் சேற்றைவாறி முரட்டுத்தனமாய் அவளுடைய முகத்தில் அடித்தபோது, மரிசகோதரி தன் முக்காட்டை கழற்றிவிட்டு, வேறொன்றைத் தரித்துக்கொள்ள வேண்டியதாயிற்று. அச்சமயம் புன்னகையுடன், "பசாசு எனக்குக் கொஞ்சம் வருத்தம் கொடுக்கிறதைப்பற்றி நான் சந்தோஷிக்கிறேன்" என்றுரைத்தாள். அவள் போர்த்துகீஸ் பாஷை பேசக்கூடாததினிமித்தம் வருத்தப்பட்டாள். பிரென்சு பாஷையில் மற்றச் சகோதரிகளோடும் வெளி மனுஷர்களோடும் சம்பாஷிப்பாள்.

ஆனல் பச்சாத்தாபப் பெண்களோடு சம்பாஷிக்க முடியவில்லை. அவர்களில் அநேகருக்கு வாசிக்கவாவது, எழுதவாவது தெரியாது. ஞான காரியங்களில் சுத்த பேதைகளாயிருந்ததினுல், அவர்களுக்கு ஞான உபதேசம் அத்தியாவசியமாயிருந்தது. ஆகையால் மரிசகோதரி அப்பாஷையைக் கற்றுக்கொண்டு அவர்களுக்கு வேதகாரியங்களைப் போதிக்க மெத்தசிரத்தையும் முயற்சியும் எடுத்தாள். இம்மடத்தின் முதலாளியம்மாள் மரி சகோதரியைப்பற்றி கூறியிருப்பதாவது.—"மரி சகோதரி மிகவும் உருக்கமுள்ள பக்தியின் நன்மாதிரிகையாயும், சர்வேசுரனுடைய ஊழியத்தையும் ஆத்தும இரட்சண்ணியத்தையும் பற்றிய சகல காரியங்களில் வேகமான பக்தி வைராக்கியத்தின் மேல்வரிச்சட்டமாயும் விளங்கினுள். தன்னுடைய பக்தி சுறுசுறுப்பால் எங்களை உற்சாகப்படுத்தி நமதாண்டவருக்கு மிகவும் பிரியமானது எதுவோ அதை நாங்கள் தேடவும், எங்க

ளுடைய புண்ணிய அபிவிர்த்திக்காக உழைக்கவும் எங்களைத் தூண்டுவாள். எல்லாவற்றிலும் கஷ்டமானதையும், வருத்தமானதையும், தைரியத்தோடும் பிற்சிநேகத்தோடும் தனக்கென்று தெரிந்துகொண்டு தானே நிறைவேற்றுவாள். இவ்வாறு தன் சிரேஷ்டரின் பாரத்தை இலேசாக்கப் பிரியப்படுவாள்" என்பதே. மரி சகோதரி லிஸ்பனுக்கு வந்த மூன்றுவாரத்துக்குப்பின் குருத்தோலை ஞாயிறு திருநாள் கொண்டாடப்பட்டது. இதுவரையில் இம்மடத்தில் அர்ச்சிய சிஷ்டவாரத்தின் சடங்குகள் நடத்தப்படவில்லை. ஆனல் இவளுடைய முயற்சியாலும் வேண்டுதலாலும் இச்சடங்குகளை மடத்தில் நிறைவேற்ற உத்தரவு பெற்றுக்கொண்டாள். அவ்வருஷத்தில் வெகுசிறப்பாய் இவைகள் கொண்டாடப்பட்டன. பெரிய வியாழக்கிழமையன்று தேவநற்கருணை பிரச்சித்தமாய் ஸ்தாபிக்கப்படப்போகிறதைப்பற்றியும், அதற்கு ஆராதனை செய்யப்போகிறதைப்பற்றியும் மெத்த ஆறுதலடைந்தாள். தேவஸ்தோத்திர கீர்த்தனைகளையும் சங்கீதங்களையும் வெகு திருத்தமாயும் திறமையாயும் இன்ப தொனியோடும் சகோதரிகள் பாடும்படியாகத் தானே முன்னின்று உழைத்தாள்.

சம்பாஷணைவேளையில் மரி சகோதரி தமாஷாயும் சந்தோஷமாயும் பேசுவாள். இவள் சொல்லும் வார்த்தைகளால் ஆறுதலடையாதவர்களில்லை. அவள் சதா முகமலர்ச்சியாயிருந்தாலும் பலமுறை அவள் இருதயம் துக்க சாகரத்தில் அமிழ்ந்தியிருக்கும். லிஸ்பனில் ஆகாயமாற்றத்தினல் மரி சகோதரியின் சுகமானது விருத்தியடைந்துவந்தது. இதினல் இன்னு மதிகமதிகமாய் உழைக்கவும் பல வேலைகளைச்செய்யவும் கூடுமாயிருக்கும் என்று நம்பியிருந்தாள். போர்த்துகீஸ் பாஷையைச் சுமாராகக் கண்டுபிடிக்கவும் தொடங்கினள். லிஸ்பனில் உள்ள அர்ச். சாமிநாதர் சபையின் சிரேஷ்டராகிய (Hickey) இக்கி சுவாமியார், அவளுடைய கஷ்டங்களிலும், சந்தேகங்களிலும் அவளுக்குவேண்டிய ஆறுதல்கள் சொல்லி அவளை நடத்திவந்தார். ஆனல் இவையெல்லாம் அதிக காலம் நீடிக்கவில்லை. லிஸ்பனில் அவள் சில வாரங்கள்தான் இருக்க நேரிட்டது. மேமீ 12-ம் வ ஆன்கர்ஸ் மடத்தின் சிரேஷ்ட தாயாரிடமிருந்து ஓர் நிருபம் வந்தது. அதில் ஒப்போர்தோவின் நல்ல ஆயன் மடத்துக்கு சிரேஷ்டதாயாராக தான் நியமிக்கப்பட்டதாக வாசித்தாள். அவ்வாரத்திலேயே லிஸ்பன் பட்டணத்தைவிட்டு ஒப்போர்தோவுக்குச் சென்றாள். அவ்வூர் மடத்து முதலாளியம்மாளின் அலுவலை மே மாதம் 16-ம் தேதி ஏற்றுக்கொண்டாள். இப்புதிய நியமனம் மரிக்கு மெத்த வருத்தத்தையும் வியாகுலத்தையும் தந்தது. ஏனெனில் இம்மடத்தின் கன்னியரையும் பச்சாத்தாபப் பெண்களையும் பராமரிக்க போதுமான ஜவேசும் வருமானமும் இல்லாததாலும், பல கடன்களிருந்ததாலும் இம்மடம் மெத்த கேவலமான நிலமையில் இருந்தது. இதில் கன்னியர் 20-பேரும் பச்சாதாபப் பெண்கள் 78-பேரும் இருந்தார்கள். இத்தனைபேரை ஆதரிக்கவும், இம்மடத்திற்கு ஏற்கெனவே இருந்த கடன்களை தீர்க்கவும், புதிதாய் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட தாயாருக்கு எவ்வாறு கூடும்? மேலும் அவளுக்கு இப்புதிய இடத்தில் அறிமுகமானவர்களாவது உதவிசெய்யக்கூடியவர்களாவது ஒருவருமில்லை. ஆனல் அவளுக்கு ஒரு காரியம் ஆறுதல் தந்தது. அவளுடைய அறையானது மடத்து கோவில் பக்கத்தில் இருந்தது. தன்னறைச் சன்னலை திறந்ததும் தேவநற்கருணைப் பேழையையும், அதின்முன் எரியும் தூண்டா விளக்கையும் பார்க்கக்கூடுமாயிருந்தது. அல்லும் பகலும் எந்த நேரத்திலும் தன்பத்தாவின் இருப்பிடத்தை நோக்கித் தரிசிக்கப் பாக்கியம் பெற்றதே போதுமென்றிருந்தாள். இம்மடத்தின் தரித்திரம் சொல்லமுடியாது. சில சமயங்களில் அவள்கையில் அறையணு முதலாய்க் காண்பதரிது. இம்மடமானது 18 மாதங்களாக கஷ்டதசையிலிருந்ததென்று அவளுடைய வார்த்தைகளைக் கொண்டே சொல்லலாம்.

ஆனல் சர்வேசுரன் மட்டில் அவள் வைத்த நம்பிக்கை வீணபோகவில்லை. தாரித்திர வார்த்தைப்பாடு கொடுக்கமாத்திரமல்ல, தாரித்திரத்தின் வருத்தத்தையும் பட்டனுபவிக்கச் செய்தருளிய சர்வேசுரனுக்குத் தோத்திரம்புரிந்தாள். தன் கணக்குப்புஸ்தகங்களின்மேல் பெரிய அக்ஷரங்களால்:—"In Te Domine speravi non confundar in aeternum" ஆண்டவரே! நான் உம்மிடத்தில் என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன், நான் நித்தியகாலத்திற்கும் வெட்கமடையேன்" என்று எழுதிவைத்தாள். சர்வேசுரன் அவளுக்கு ஆச்சரியமாய்ப் பல சமயங்களில் ஒத்தாசை புரிந்தார். ஒருவிசை ஒரு உபகாரியிடமிருந்து 4 பவுன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனல் அதை இரட்டித்துக்கொடுக்கும்

படி அர்ச். சூசையப்பரை மன்ருடினுள். சில தினங்களுக்குப்பின் 16 பவுன் பெற்றுக்கொண்டாள். வேருெரு சமயம் மடத்துக்குப் பெருத்த கஷ்டம் நேரிட்டபோது, தானும் கன்னியரும் அர்ச். சூசையப்பரைக்குறித்து நவநாட்செபம் செய்து வேண்டிக்கொண்டார்கள். 8-வது நாள் ஒரு அந்நியமாது 100 பிரான்க்ஸ் (60 ரூபாய்) அடங்கிய ஒரு உறையை மடத்துக்குக் கொண்டு வந்து சொடுத்துவிட்டு போய்விட்டாள். அதின்மேல் அர்ச். சூசையப்பரால் அனுப்பப்பட்டது என்று எழுதியிருந்தது. இப்படியே மடத்தின் பல அவசரங்களில் புதுமையாய்ப் பல கொடைகளைப் பெற்றுக்கொண்டாள். சிரேஷ்ட தாயாரின் ஓயாத உழைப்பாலும் மட்டான செலவுகளாலும் மடத்தின் தோட்டங்களை விருத்திசெய்து அவை அதிகமாய்ப் பலன்கொடுக்கும்படி செய்ததாலும், மடத்தின் சவரக்ஷணைக்குப் போதுமான வருமானம் கிடைத்தது. முன்னிருந்த கஷ்டங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் நீங்கிப்போயின. மரி சகோதரி நாளெல்லாம் மெத்த சுறுசுறுப்புடன் வேலைசெய்வாள். ஒரு சமயம் சமயல் கூடத்தில் உதவிசெய்வாள். வஸ்திரங்களைத் தைப்பாள். கோவில் விளக்குகளைச் துலக்குவாள். தோட்டத்தில் களைபிடுங்குவதும், பூமியைக்கொத்துவதும், பாதைகளைச் செப்பனிடுவதும், கல், மண், சுமப்பதும் இவை முதலான கடினவேலைகளையுஞ் செய்வாள். பிரபுக்கள், சீமாட்டிகள், ஏழை ஜனங்கள் அவளை அடிக்கடி சந்திக்க வருவார்கள், இவர்கள் வேத கடமைகளை அனுசரித்து வருகிருர்களாவென்று விசாரித்து, சிலர் நல்ல கிறீஸ்துவர்களல்லவென்று தெரிந்தால் தக்க புத்திமதிகளைச் சொல்லி அவர்களைப் புண்ணியவழியில் சேர்ப்பாள்.

மடத்தின் சவரக்ஷணையைப்பற்றி உபகாரிகளுக்குக் கடிதங்கள் எழுதுவாள். சிரேஷ்டருக்கும் சபை காரியங்களை அடிக்கடி எழுதி தெரிவிப்பாள். பகலில் தீராதவேலைகளை இரவில் அதிக நேரம் விழித்திருந்து செய்வாள். தேவ ஊழியத்துக்கடுத்த காரியங்களில் மரிசகோதரி எவ்வித தாராளமான செலவையும் செய்ய அஞ்சவில்லை. ஒப்போர்தோ மடத்துக்கு வந்தவுடன் கோவிலுக்குத் தேவையான புதிய பூசை பாத்திரங்கள், உடை ஆபரணங்கள் யாவற்றையும் யாதொரு குறைவில்லாமல் சம்பாதித்துத் தந்தாள். தேவாலயத்தைத் தன் கையாலேயே சோடித்து சிங்காரிப்பாள். ஏராளமான அழகிய புஷ்பங்களாலும் மெழுகு திரிகளாலும் பீடங்களை அலங்கரித்துவைப்பாள். திருச்சபையின் பெரிய திருநாட்களை, விசேஷமாய்த் தேவநற்கருணை திருநாளை மெத்த ஆடம்பர சிறப்போடு கொண்டாட ஏற்பாடுசெய்வாள். சகோதரிகளுக்கும் பசசாத்தாப பாலர்களுக்கும் திருச்சபை கொண்டாடும் திருநாட்களைப் பற்றியாவது, சுவிசேஷ வாக்கியத்தின் பேரிலாவது, அர்ச்சியசிஷ்டவர்களின் சீவியத்தைப்பற்றியாவது அடிக்கடி உபந்நியாசிப்பாள். மடத்தில் சாதாரணமாய்ப் பாவசங்கீர்த்தனம் கொடுக்கக் குறிக்கப்பட்ட குருக்களைத் தவிர சில காலங்களில் வேறே குருக்களையும் அழைத்து அவர்களிடம் எல்லோரும் பாவசங்கீர்த்தனம் செய்யும்படியாகத் திட்டம்செய்வாள். அவர்கள் பிரசங்கங்கள் செய்யும்படியாகவும் தியான முயற்சிகள் கொடுக்கும்படியாதவும் ஏற்பாடு செய்வாள். மடத்தில் வியாதிக்காரரா யிருக்கிறவர்களுக்கு மெத்த பட்சத்தைக் காண்பித்துப் பராமரிதது வருவாள். அவர்கள் இருப்பிடம் தன் அறைக்குத் தூரமாயிருந்தாலும் ஒரு நாளில் பல முறையும்போய் அவர்களைச சந்திப்பாள். அவர்கள் மரிக்கும் தருணததில் அவர்களோடிருந்து அவர்களை நல்மரணத்துக்கு முஸ்திப்புசெய்வாள். சந்தேகத்தாலும் சோதனைகளாலும் கலங்கி வருத்தப்படும் சகோதரிகளுக்கு ஆறுதல் சொல்லவும், அவர்களுடைய கவலைகளை நீக்கவும் விசேஷ வரம் பெற்றிருந்தாள். எப்போதும் மனமகிழ்ச்சியோடும் முகமலர்ச்சியோடும் இருப்பது. புண்ணிய வர்த்திப்புக்கு இன்றியமையாத சாதனமென்று கருதி, எல்லோரும் சந்தோஷ உல்லாசமா யிருக்கும்படியாகச செய்வாள். பச்சாத்தாபப் பெண்கள் திருந்தினபின் அவர்கள் திரும்பி நல்ல குடும்பங்களில் சேர்ந்து நல்லொழுக்கமாய்ச சீவிக்கும்படி பிரயத்தனங்கள் செய்வாள். அவர்கள் உலக வாழ்க்கைக்குப்போனபின் அவளைச் சந்தித்து அவளிடம் ஆறுதல் பெற்றுக்கொள்ள மடத்திற்கு வந்து போவார்கள். சிலமாதங்களுக்குள்ளாக 100 பச்சாத்தாபப் பெண்கள் வரையில் மடத்தில் சேர்க்கப்பட்டார்கள். புதிதாய் வருகிறவர்களுக்கு இடம் இல்லை என்று சொல்வதற்கு அவளுக்கு மனம்வராது. ஒவ்வோர் காலங்களில் 137-பேர் வரையில் மடத்தில் ஆதரிக்கப்பட்டு வந்தார்கள்.

S. M.

(தொடரும்.)

GNANAMANI, III PART.

ஞானமணி 3-ம் பாகம்.

49-ம் அதிகாரம்.

பண்டிதர் தற்கொலை செய்துகொண்டிருப்பாரென்று சகலரும் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

மறுநாள் பங்கு ஸ்வாமியாருடன் டிக்ரூஸ் ஸ்வாமியார் அவ்வூரிலுள்ள கன்னியர் மடத்துக்குப்போனார். விஸ்வாச நாயகருடைய இரு குமாரத்திகள் அந்த மடத்தில் கன்னியாஸ்திரிகளா யிருந்தார்கள். மூத்த குமாரத்தியான புஷ்பமரியம்மாள் அம்மடத்திற்குப் பெரிய தாயாராயிருந்தார்கள். சங். டிக்ரூஸ் ஸ்வாமியாருடைய விருத்தாந்தங்களையெல்லாம் மடத்தார் ஏற்கனவே அறிந்திருந்தபடியால் அவர்கள் அவரைப்பார்க்க மகா ஆவல் கொண்டிருந்தார்கள்.

தங்கள் மடத்துக்கு அவர் விஜயம் செய்தபோது அவருக்கு நல்வரவு கொடுத்து, புகழ்ச்சி கூறி, அவர் பேரா லுண்டாக்கப்பட்ட நேர்த்தியான பாடல்களைப் பாடி, அவருக்கு மரியாதை செய்தார்கள். மேலும் உத்தம கிறீஸ்துவரான விஸ்வாச நாயகருடைய செல்வப் புதல்வி அம்மடத்துக்கு பெரிய தாயாரா யிருக்கிற விஷயத்தை அவர் அறிந்து, சந்தோஷப்பட்டு, அந்த அம்மாளை நோக்கி, "உங்கள் சகோதரருடைய விசனத்துக்குரிய சம்பவங்களைக் கேள்விப்பட்டேன். ஆனால் தயையுள்ள சர்வேசுரன் அவர் மீது இரக்கமாயிருப்பா ரென்பது நிச்சயம். ஏனெனில், அவருடைய விஸ்வாசமும் தர்மக்கிரிகையும் வீணாகமாட்டா. மேலும் அவருடைய பக்தியுள்ள பெற்றோருடையவும் உங்களுடையவும் மன்றாட்டு வீண்போகாது" என்று சொன்னபோது, பெரிய தாயார் விசனத்துடன் "சர்வேசுரன் நல்லவர், அவருடைய செய்கையை மனிதர் கண்டுபிடிப்பது கூடாத காரியம். தயாபர கர்த்தர் அவரை யிரக்ஷித்திருப்பாரென்பது என் பூரண நம்பிக்கை.

"ஆயினும் அவர் தற்கொலை செய்துகொண்டிருப்பாரென்று சகலரும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் எனது அபிப்பிராயம் அப்படியல்ல. ஏனெனில், அவர் சுபாவமாகவே தேவ பக்தியும் விஸ்வாசமுமுள்ளவர். நாடோறும் தேவதாயாருக்கு தோத்தியமாக 53-மணி செபமாலை ஜெபிக்கத் தவரமாட்டார். வேறு பற்பல நற்கிருத்தியங்களையும் நடத்திவந்தார். மேலும் அவருடைய மனைவியாகிய ருக்மணி கொலை செய்யப்பட்ட நாளில் இவருக்குச் சொல்லிமுடியாத துக்கமும் விசனமும் உண்டானபோதிலும், அவருடைய மனைவி முந்தின நாள், தன் பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டு அழுது; மறுநாளே கோவிலுக்குப்போய் பாவசங்கீர்த்தனஞ் செய்வதாக சொன்னதைப்பற்றி கேள்விப்பட்ட இவர் ஆறுதல் அடைந்தாரென்று இவருடைய வேலைக்காரர் மூலியமாய் அறியலானேன்.

"இப்பேர்ப்பட்டவர் பெரும் பாதகமாகிய தற்கொலையை நடத்தியிருப்பாரோ? பரிச்சேதம் அப்பாதகத்துக்கு அவர் உள்ளா யிருக்கமாட்டார் என்பது என் பூரண அபிப்பிராயம். மேலும் அவரை நான் ஒரு நாளும் மறக்கிறதில்லை. அவருடைய ஆத்துமம் உத்தரிக்கிற ஸ்தலத்தி லிருந்தால், வேதனை குறைந்து மோக்ஷபதவி அடையும்படி நாடோறும் சர்வேசுரனைப் பார்த்து மன்றாடி வருகிறேன்" என்று சொன்னார்கள்.

"ஆம், தாயாரே! எப்போதைக்கும் செபதபத்தையே வல்லாயுதமாகப் பிடிக்கவேண்டும். செபத்தால் சகலமும் அனுகூலப்படும். உங்கள் தமயனுருடைய ஸ்திதியிலும் என் தகப்பனுருடைய ஸ்திதி மகா விசனத்துக்குரியது! நானும் அவருக்காக வேண்டி வருகிறேன்" என்று டிக்ரூஸ் ஸ்வாமியார் சொன்னபோது, "அவரும் பிழைத்திருப்பதும் செத்ததும் தெரியவில்லை; நமது செபம் இருவருக்கும் உதவு"மென்று மடத்து தாயார் சொல்லி, வெகு நேரம் பேசிய பின், சங். ஸ்வாமிமார்கள் மடத்தை விட்டுப்புறப்பட்டார்கள்.

டிக்ரூஸ் ஸ்வாமியார் தர்மானந்த புரத்திலும் அதைச் சேர்ந்த கிராமங்களிலும் பிரசங்கம் திவ்யபூசை பாவசங்கீர்த்தனம் முதலியவைகளை நிறைவேற்றிவந்தார். தூர கிராமங்களிலுள்ளவர்கள் டிக்ரூஸ் ஸ்வாமியாருடைய அதிசயத்துக்குரிய சரித்திர விருத்தாந்தங்களைப்பற்றி கேள்விப்பட்டு ஆச்சரிய பிரமைகொண்டார்கள். அவரைக் கண்டவர்களனைவோரும் அவர் மட்டில் நேசங்கொண்டார்கள்.

மூன்று மாதமும் வெகு சீக்கிரத்தில் கடந்து போயிற்று. சங். டிக்ரூஸ் ஸ்வாமியார் கண்டிக்டிக்குப் புறப்படவேண்டியதற்கான ஆயத்தமெல்லாம் செய்து முடித்தார். தர்மானந்தபுரத்தை விட்டுப் புறப்படுவதற்கு முந்தின ஞாயிற்றுக்கிழமையிலும், புறப்படும் தினமாகிய திங்கட்கிழமை அதிகாலையிலும் அவருடைய பூசையைக்காணும்படி அவ்வூராரும் சுற்றுப்பக்கத்து கிராமத்தாரும் வந்து சேர்ந்தார்கள்.

அன்று சாயந்திரம் தர்மானந்த புரத்துப் பங்கைச் சேர்ந்த கிறீஸ்துவர்கள் டிக்ரூஸ் ஸ்வாமியாரைக் கூட்டமாய் வந்து சந்தித்து, அவர் தங்களுக்குப் புரிந்த ஞான உபகாரங்களுக்காக மறுபடியும் நன்றிகூறி, தங்கள் பங்கிலுள்ள சகல கிறீஸ்துவர்களிடத்திலும் தண்டின ரூபாய் ஆயிரத்தையும் ஏற்றுக்கொள்ளும்படி அவரை மன்றாடினார்கள்.

அப்போது ஸ்வாமியார் அவர்களுடைய உதாரகுணத்தைக் கண்டு அதிசயித்து, “நான் திருடர் கையிலிருந்து மீட்கப்படும்படி மேற்றிராணி ஆண்டவர் கொடுத்து அனுப்பிய மீட்புப் பணத்துக்குப் பதிலாய் நீங்களிதைக் கொடுக்கிறீர்களென்று அறிகிறேன். இதை மேற்றிராணியார் பாதத்தில் வைத்து, இந்த ஆயிரம் ரூபாயும் தர்மானந்தபுரத்து கிறீஸ்துவர்கள் தங்களுக்கு காணிக்கையாக ஒப்புக்கொடுத்தார்கள் என்று சொல்லுவேன்” என்று அவர்களுக்கு நன்றி கூறி கடைசி ஆசீர்வாதம் பாலித்து மறுநாள் அதிகாலையில் ரயில்வண்டி யேறினார்.

அவருடைய தாயாரான அபிராமியம்மாளும் சிலகாலம் தன் நேசகுமாரனுடன் கண்டி சீமையில் தங்கும்படி கருத்துகொண்டு, தன் தகப்பனாராகிய ஈசாக் உபதேசியாரின் அனுமதியின்மேல் ஸ்வாமியாருடன் புறப்பட்டார்கள். மேலும் கர்த்தர் பிறந்த திருவிழாவன்று தமது பங்கில் பூசைசெய்ய வேண்டுமென்கிற கருத்துடன் டிக்ரூஸ் ஸ்வாமியார் எந்த ஊரிலும் தங்காமல் தூத்துக்குடிக்குப்போய்ச் சேர்ந்து, அங்கிருந்து கொளும்புக்கு கப்பலேறினார்.

கொளும்பிலிருந்து ஒரு வாடகை வண்டி பிடித்துக்கொண்டு எவ்வளவு துரிதமாய் தமது பங்குக்குப்போய் சேரக்கூடுமோ அவ்வளவு துரிதமாய்ப் பிரயாணஞ் செய்யக் கோரியும் அவர் கோரிக்கை நிறைவேறாமல் போய்விட்டது.

அது எப்படியெனில் காட்டு மிருகங்களைப் பற்றியும், திருடர் பயத்தைப்பற்றியும் இரண்டொரு வண்டிசேர்ந்து போகிற வழக்கமில்லை அந்த மார்க்கத்தில். இராவேளையே 50, 100, 200. வண்டிகள்போல் சேர்ந்துபோகும். அப்போதுதான் பிரயாணிகளும் பயமின்றி பயணம் செய்வார்கள். அப்படியே அநேக வண்டிகள் கூட்டம்சேர்ந்து போகும்போது முதலாய் கள்ளர் அந்த வண்டிகளைக் காலபேதத்துக்கு ஒத்தாப்போல் தாக்குவதுண்டு.

க்ஷாமகாலங்களில் கள்ளர் வெகு துணிவுடன் பிரயாணிகளைத் தாக்குவது சாதாரணம் இந்நாட்டில். ஆனால் சங். டிக்ரூஸ் ஸ்வாமியார் பிரயாணப்பட்ட வருஷம் க்ஷேமகாலமா யிருந்த போதிலும், எந்த வண்டிக்காரனும் தனியாகப் பிரயாணஞ்செய்ய சம்மதியாதபடியால் இராவேளையில் மற்ற வண்டிக்கூட்டங்களுடன் பிரயாணஞ் செய்யும்படி நேரிட்டது. இவ்வாறு இராவேளையில் யாத்திரைசெய்து கர்த்தர்பிறந்த திருவிழாவுக்கு முந்தினநாள் அவருடைய பங்குவிசாரணை ஊருக்குப் போய்ச் சேரக்கூடுமோயிருந்தது.

கொளும்பைவிட்டுப் புறப்பட்டநாள் முதற்கொண்டு வழியில் யாதொரு தடையும் விபத்துமில்லாமல் சுகசுகிதமாய் யாத்திரையை நடத்தினார்கள் டிக்ரூஸ் ஸ்வாமியாரும் அவருடைய தாயாரும்.

டிசம்பர்மீ 23உ சாயந்திரம் வண்டிகட்டிப் பிரயாணப்பட்டுப் போகும்போது, மறுநாள் காலை நாலுமணிக்கு தமது சாதாரண வழக்கப்படி நித்திரையினின்று எழுந்து, செய்யவேண்டிய செபம், தியானமுதலிய ஞான முயற்சிகளை செய்து முடித்துக்கொண்டிருக்கும்போது, அவரை யேற்றிப்போன வண்டிக்காரன், “ஐயோ! பாவம்! ஒரு மனிதன் ரஸ்தாவில் கிடக்கிறான்!” என்ற சப்தம் டிக்ரூஸ் ஸ்வாமியார் காதில் விழவே, வண்டியை ஒதுக்கி நிறுத்தச்சொல்லி, சிலவிசை அவன் கிறீஸ்துவனா யிருந்தால் கடைசி தேவத்திரவிய அனுமானத்தை கொடுக்கலாமென்ற கருத்துடன்; அவஸ்தை பெட்டியை கையில் பிடித்துக்கொண்டு, வண்டியைவிட்டு இறங்கினார் ஸ்வாமியார்.

ஸ்வாமியார் வண்டியை விட்டு இறங்கி ரஸ்தா பக்கத்தில் கிடக்கும் மனிதனைப் போய்ப் பார்த்த க்ஷணமே பயந்து நடுங்கினார். ஏனெனில், அம்மனிதனுடைய சரீரத்தில் பெருத்த காயங்கள் காணப்பட்டன. தலைமண்டை உடைபட்டு சர்வாங்கமும் இரத்தத்தால் மூடப்பட்டு, பார்க்கிறவர்களுக்கு பயங்கரமா யிருந்ததைப்

பற்றி, ஸ்வாமியார் அவனைக் கண்டு சற்று அஞ்சி பயந்தபோதிலும் தைரியங்கொண்டு அவனை யணுகி, கன்னத்தில் கையை வைத்து, பக்ஷத்துடன் "நீயார்? கிறீஸ்துவனா? சொல்" என்றார். காயப்பட்டவனோ ஒன்றும் பேசாமல் பட்டுப் போன மரக்கட்டையைப்போல் கிடந்தான். அப்போது ஸ்வாமியார் தமது தாயாருக்கு வியாதிக்காரனுடைய விஷயம் தெரிந்திருப்பதாக ஏற்கனவே அறிந்திருந்தபடியால் அவர்களைக் கூட்டிக்கொண்டுபோய் அந்த நிற்பாக்கிய மனிதனைப் பார்க்கச் சொன்னார்.

அபிராமியம்மாளும் காயம்பட்டவனைப் பார்த்து நாடியை பரிசோதனை செய்துகொண்டு இன்னம் உயிர் இருக்கிறது. "நம்மால் கூடிய உதவி செய்யலா" மென்று தன்கூட கொண்டுவந்திருந்த மருந்து பெட்டியைத் திறந்து, இரத்தத்தைத் துடைத்து சுத்திசெய்து, தன் வஸ்திரத்தைக் கிழித்து அந்த நிற்பாக்கிய மனிதனுடைய காயங்களைக் கட்டி, வண்டிக்காரனுடைய உதவியால் ஸ்வாமியாரும் அவர் தாயாரும் காயப்பட்டவனைத் தூக்கிக்கொண்டுபோய் வண்டியில் மெல்லென ஏற்றிப் படுக்கவைத்தார்கள். அதன்பிறகு ஸ்வாமியார் காயப்பட்டவன் கிட்ட உட்கார்ந்து; "ஸ்நேகிதனே, எப்படி யிருக்கிறாய்? உனக்கு ஏதாகிலும் தேவையோ? நீயெந்த ஊர்? எந்த வேதம்?" என்று பலதடவை கேட்டும், அவன் தெளிவற்று இருந்தபடியால், தமது தாயாரை வண்டியிலிருக்கச் சொல்லி வண்டிக்குப் பின் தாம் நடந்துபோனார்.

வண்டி போகும்போது டிக்ரூஸ் ஸ்வாமியார் ஜெபமாலையைக் கையிற் பிடித்துக்கொண்டு, காயப்பட்டவன் கிறீஸ்துவனா யிருப்பானாகில் அவனுக்குத் தெளிவைக் கொடுத்து தேவத்திரவிய அநுமானங்களைப் பெறும்பாக்கியம் அவனுக்குப் பாலிக்கும்படி சர்வேசுரனை மகா பக்தி உருக்கத்துடன் மன்றாடினார். ஆனால் அவன் அஞ்ஞானியா யிருக்குங்கால் சத்திய வேதத்தில் சேர அவனுக்கு இஷ்டப்பிரசாதத்தை அருளும்படி வேண்டிக்கொண்டுபோனார்.

அன்றுகாலை ஏறக்குறைய ஒன்பது மணிக்கு அருகாமையிலிருந்த ஊர்போய்ச் சேர்ந்தவுடனே, வண்டியை நேராக ஆஸ்பத்திரிக்கு ஓட்டும்படி வண்டிக்காரனுக்குக் கற்பித்தார். வண்டி ஆஸ்பத்திரிக்குப்போய்ச் சேரவே, ஸ்வாமியார் அப்பாத்திகரியுடன் பேசியபின், ஆஸ்பத்திரி வேலையாட்களால் காயப்பட்டவன் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகப்பட்டான். ஸ்வாமியாரும் வழியில் நடந்த சங்கதியை அப்பாத்திகரிக்குத் தெரியச்செய்து, கோவில் மார்க்கமாய் வண்டியை ஓட்டும்படி வண்டிக்காரனுக்கு உத்தரவு கொடுத்தார்.

அப்படியே வண்டி கோவிலுக்கு அருகாமையில் போய்ச் சேர்ந்தபின் டிக்ரூஸ் ஸ்வாமியார் தமது தாயாருடன் கோவிலுக்குப்போய் அங்கு சற்றுநேரம் ஜெபித்த பிறகு அறைவீட்டுக்குச் சென்றார். அன்னேரத்தில் அந்த ஊர் பங்கு ஸ்வாமியார் கட்டிலில் படுத்திருந்தவர் டிக்ரூஸ் ஸ்வாமியாரைப் பார்த்தவுடனே, எழுந்திருந்து "ஸ்வாமீ! என் காவலான சம்மனசானவர்தான் உங்களை யிங்கு அழைத்துக்கொண்டு வந்தார். ஏனெனில், நேற்றைத்துவக்கி எனக்குத் திரேக அசௌக்கிய முண்டாகி துன்பப்படுகிறேன். இன்றுகாலை வருத்தத்துடன் பூசைமுடித்து 50, 60 பேருக்குப் பாவசங்கீர்த்தனங் கொடுத்தேன். அதற்குப்பின் எனக்கு நோவு அதிகரித்தபடியால் கட்டிலில் வந்து படுத்துக்கொண்டேன். நாளைக்குப் பெரிய திருவிழாவா யிருப்பதால் எப்படிப் பூசைக்கு ஏற்பாடு செய்யலாமென்று யோசனையாயிருக்கும்போது நீர் வந்து சேர்ந்தீர். ஆகையால், சம்மனசானவர்தான் உம்மை இங்கு அழைத்துக்கொண்டு வந்தார்" என்று புன்னகையுடன் சொன்னார்.

அதற்கு டிக்ரூஸ் ஸ்வாமியார்: "நான் நாளைக்கு என் பங்கில் கர்த்தர் பிறந்த திருநாளைக் கொண்டாடுங் கருத்துடன் எங்குந் தங்காமல் கடின பிரயாணம் செய்துவந்தேன். ஆனால் உங்களுக்கு அசௌக்கியமாயிருப்பதால் இங்கேயே தங்குவேன் ஸ்வாமீ" யென்று சொல்லவே வியாதிக்கார குருவுக்கு சந்தோஷ முண்டானது.

அதற்குப்பின் தமது ஊரில் நடந்த விருத்தாந்தங்களைப்பற்றியும், தமது தாயாரை அறிந்துகொண்ட விதத்தைப்பற்றியும் சுருக்கமாய் அவருக்கு அறிவித்து, பாவசங்கீர்த்தனம் கொடுக்கும்படி கோவிலுக்குப் போனார் டிக்ரூஸ் ஸ்வாமியார்.

ஏறக்குறைய இரவு பதினொரு மணியளவும் முன்னூறு பேருக்குப் பாவசங்கீர்த்தனங் கொடுத்து, நடுச்சாமத்தில் பாட்டுப்பூசை செய்தார். மூன்றாம் பூசை காலை ஒன்பது மணிக்கு முடிந்தது. பூசை முடிந்தபின் ஊரா ரெல்லோரும் சங். டிக்ரூஸ் ஸ்வாமியாரைச் சந்தித்து, அவருடைய தாயாரைக்கண்டு களிகூறும்படி சர்வே

சுரன் செய்த பெரும் நன்மைக்காக அவருடன் சந்தோஷித்து மகிழ்ந்து, அந்தப் பெருந் திருநாள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் இல்லிடங்களுக்கு ஏகினார்கள்.

சங். டிக்ரூஸ் ஸ்வாமியார் சுமார் பத்து மணிக்கு பங்கு ஸ்வாமியாரிடம் போய் அவருக்கு திருவிழா மங்கள வாழ்த்துதல் கூறி, அங்கேயே உட்கார்ந்து. அவருடன் பேசிக்கொண்டே காலை போஜனம் செய்துகொண்டிருந்தார். கொஞ்ச நேரத்துக்குள் ஒரு பியூன் உள்ளே பிரவேசித்து அவன் கொண்டுவந்த கடிதத்தை பங்கு ஸ்வாமியார் கையில் கொடுத்தான். அதையவர் வாங்கி தமது பேருக்குள்ள விலாசத்தைப் பார்த்து, அதன்மேல் (Very urgent) மெத்த அவசரம் என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டு, உடனே அதைத் திறந்து வாசித்துப் பார்த்து, டிக்ரூஸ் ஸ்வாமியாரை நோக்கி: "ஸ்வாமீ, உங்களுக்கு வேலைமேல் வேலை யுண்டாகிறது!" என்ற போது, "சொல்லுங்கள் ஸ்வாமீ யின்ன வேலை யென்று, நான் தயாராயிருக்கிறேன். இந்த இளம் பிராயத்தில் சர்வேசுரனுக்கு வேலை செய்யாவிட்டால் இனி யெப்போது செய்வேன்? சொல்லுங்கள்" என்றதைக்கேட்டு பங்கு ஸ்வாமியார்: "ஆஸ்பத்திரியில் ஒருவன் மெத்த அவஸ்தையாயிருப்பதால் என்னை வரும்படி காகிதம் எழுதியிருக்கிறாள் நர்ஸ்" என்றார். "நான் போகிறேன் ஸ்வாமீ" யென்று பாதி சாப்பிட்டும் சாப்பிடாமலும் எழுந்து, அவஸ்தை பெட்டியை கையில் எடுத்துக்கொண்டு வெளியே புறப்பட்டார் டிக்ரூஸ் ஸ்வாமியார்.

அந்நேரத்தில் திருவிழா ஆசீர்வாதம் பெறும்படி தம்மிடத்தில் வந்த டிக்ரூஸ் ஸ்வாமியாருடைய தாயாரை அன்புடன் ஆசீர்வதித்து, பக்கத்தில் உட்காரச்சொல்லி தன் பூர்வ விருத்தாந்தங்களை யெல்லாம் விவரமாய்த் தமக்கு அறிவிக்கும்படி சொன்னார் அந்த ஊர் பங்கு ஸ்வாமியார்.

அபிராமியம்மாளும் சுவாமியாருடைய கருத்துக்கு இணங்கி, தன் தாய் தகப்பன்மார் சத்திய வேதத்தைவிட்டு பதிதவேதத்தில் சேர்ந்த விதத்தையும், தன் தம்பி ஞானமணிக்கு உண்டான வியாதியையும், அவன் புதுநன்மை வாங்கின போது நடந்த அற்புத சம்பவத்தையும், அதற்குப்பின் தன் குடும்பமுழுதும் சத்தியவேதத்தில் மறுபடியும் சேர்த்துக்கொள்ளப்பட்ட வரலாற்றையும், அதற்குப்பின் தானும் தன் தகப்பனும் அனுபவித்த கஷ்ட தரித்திரத்தையும், துன்ப துரிதங்களையும் பற்றி விவரமாய்த் தெரியச்செய்தாள்.

அதன் பிறகு பவுல் போதகர் இன்னாரென்றும், அவரும் அவருடைய குடும்பமும் எப்படி சத்தியவேதத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்களென்றும், இதைப்பற்றி அந்தக் குடும்பம் எப்படி துன்ப துரிதங்களை அனுபவித்த தென்றும் விளக்கி விவரமாய்ச் சொன்னபின், தான் கலியாணம் செய்துகொண்ட பிறகு அனுபவித்த துக்க துயரத்தையும், கஷ்ட நிர்ப்பந்தங்களையும், நிந்தை அவமானத்தையும், தன் கணவனுடைய குணகுண நடவடிக்கைகளையும், அவன் தன் குழந்தையை இராவேளையில் எடுத்துக்கொண்டு ஓடிப்போனதையும் பற்றிச் சொல்லக்கேட்ட ஸ்வாமியார் அவள்மட்டில் இரக்கங்கொண்டு, அவளுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொன்னார். மேலும் அபிராமியம்மாளுடைய மனோதைரியத்தையும் பொறுமையையும் அறிந்து அதிசயப்பட்டார்.

அப்போது அபிராமியம்மாள் ஸ்வாமியாரைப் பார்த்து, "சங்கைக்குரிய பிதாவே! எனக்குண்டாயிருந்த துன்ப துரிதமும் துக்க துயரமும் நீங்கிப்போயின. என் அருமை குமாரனை கண்டுகொண்ட க்ஷணமே என் இருதயத்திலுண்டாயிருந்த பெரும்புண் ஆறிவிட்டது. தயையுள்ள சர்வேசுரன் என் துக்க துயரத்தை யெல்லாம் சந்தோஷமாக மாற்றிவிட்டார். ஆனால் ஒரு குறைமாத்திரம் உண்டு. என் நிர்ப்பாக்கிய கணவன் சத்தியவேதத்தில் சேர்ந்தால் அது பெரும்பாக்கியமாகு" மென்றபோது, "உங்கள் புருஷன் இன்னும் உயிரோடு இருக்கிறாரா? அது உங்களுக்கு எப்படித்தெரியும்?" என்று ஸ்வாமியார் வினவினார்.

அதற்கு அபிராமியம்மாள் சொல்வாள்: "அவர் உயிரோடு இருக்கிறதும் இறந்துபோனதும் எனக்குத் தெரியாது, ஆனால் அவருடைய கவலை பெரும் வருத்தத்தை உண்டாக்குகிறது என் இருதயத்தில்" என்றாள்.

"அம்மா, அபிராமியம்மா! நீங்கள் இவ்வளவு அன்பாய் நேசிக்கும் நிர்ப்பாக்கியனும் நன்றிகெட்டவனுமான உங்கள் கணவன் இதுவரையில் இறந்து போயிருந்தால் நாமென்ன செய்கிறது! ஆனால் அம்மனிதன் சாகாமல் உயிரோடு இருப்பானாகில் உங்களுடையவும் உங்கள் குமாரனுடையவும் கண்ணீரும் செபதவங்களும் நிஷ்பலமாகா. சர்வ காருண்யரான சர்வேசுரன் உங

கள் இருவருடைய பிரார்த்தனைக்கும் செவிசாயாமல் போகார்.

உங்கள் பிரிய குமாரனை நான் அறிவேன். அவர் பாலகனாய் கண்டிக்குவந்து சேர்ந்தபோது நான் அவருக்குப் பள்ளியில் படித்துக் கொடுத்தேன். அவருடைய குணங்களும் நன்னடத்தையும் எனக்கு நன்றாய்த் தெரியும். இப்பேர்ப்பட்ட குமாரனுக்கு நீங்கள் தாயாயிருப்பது உங்களுக்கு பெரும்பாக்கியம் என்னலாம். ஆகையால் அம்மா, துக்க துயரப்படாமல் கர்த்தரை நம்பி பிரார்த்தித்து வாருங்கள். மகா இரக்கத்துக்குரிய சேசுகிறீஸ்துநாதருடைய இருதயம், கல் நெஞ்சனான அந்த நிர்ப்பாக்கியனுடைய இருதயத்தை யிளக்கி, தமது சத்தியவேதத்தில் சேர்த்துக் கொள்வார். அந்த மனிதன் மரித்திருந்தாலும் அவனுடைய நிர்ப்பாக்கிய ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுங்கள்" என்று தைரியம் சொன்னார்.

அபிராமியம்மாள் ஸ்வாமியாருடன் பேசிக்கொண்டிருக்கும்போதே அப்போதைக்கப்போது மணிப்பிரகாரம் அவருக்கு மருந்து கொடுத்து, பாலோ, சூப்போ, இவை முதலிய ஆகாரங்களையுங் கொடுத்துக்கொண்டிருந்தாள்.

VARIED AND VARIOUS.
பல விஷய மஞ்சரி.

கல்வி.

இத்தேசத்தில் ஏறக்குறைய நூற்றுக்கு எண்பது பெயர் கல்வியற்றவர்களாகவே இருக்கின்றனர். அதற்குக் காரணம் படிப்பற்ற தாய் தந்தையர்கள் தங்கள் மக்களையும் தங்களைப்போலாக்கி விடுகின்றார்களென்பதேயாம்.

* * * *

சில மனிதர்கள் தங்களுடைய குழந்தைகளை பத்து வயது குழந்தைகளாவதற்கு முன்பே பஞ்சாலை முதலிய வேலைகளுக்கு அனுப்பி அவர்கள் முன்னேற்றத்தையும் கல்வியையும் கெடுத்துவிடுகின்றனர். இது மிகக் கொடுமையினும் கொடுமையாம்.

* * * *

பணத்திற் பெருத்த தனவந்தர்களிற் பலர் தங்கள் குழந்தைகள் அதிகமாகப் படித்தால் நெஞ்சுலர்ந்து போவார்களெனக் கருதி "நமக்கென்ன போதுமான திரவிய மிருக்கிறது; இதுவே இரண்டு மூன்று தலைமுறைகளுக்குப் போதுமான சொத்தாகும்; ஆகையால் நமது பிள்ளைகள் படித்தாகவேண்டுமென்னும் அவசியமில்லை" என்றெண்ணி தங்கள் புத்திரர்களைக் கல்வியற்றவர்களாக்கிவிடுகின்றனர். அவர்களுடைய கல்வியற்ற அக் குழந்தைகள் பெரியோரானபின் கல்வி யறிவின்மையால் தங்கள் தகப்பன்மார் அரிதிற் தேடிய திரவியங்களை பலவித தூர்வழிகளில் செலவழித்துவிட்டு "கடவுளே! என்ன செய்வேன்? துள்ளித் திரிகின்ற காலத்திலே என் துடுக்கடக்கிப் பள்ளிக்கு வைத்திலனே என் தந்தையாகியப் பாதகனே" என்று தங்களுக்கு கல்வியைக் கற்பிக்காத தந்தைமார்களை நிந்தித்தழுகின்றனர்.

* * * *

ஒவ்வொரு தகப்பன்மார்களும் தங்களுடைய புத்திரர்களுக்குத் தேடி வைக்கவேண்டியது ரூபாய்களல்ல; வீடுகள், நிலங்கள், தோட்டங்கள் அல்ல. அவைகளெல்லாம் அழியத்தக்கனவாகும். கல்விதான் வாழ்நாளில் நன்மைக்கும் தேவ பக்திக்கும் வழிகாட்ட வல்லது. வெள்ளத்தால் அழிக்க முடியாததும், நெருப்பால் எரிக்க முடியாததும் அரசர்களாலும் அபகரித்துக்கொள்ள முடியாததும், யாருக்காவது (சொல்லி) கொடுத்தாலும் குறைவுபடாததும், திருடர்களால் திருடிக்கொண்டு போகமுடியாததும் கல்விதான். யாரா யிருப்பினும் கற்றவர்களுக்குத்தான் எல்லோரும் 'வருக' வென்று பரிவுடன் அழைத்துப் புகழ்ந்து கொண்டாடுவார்கள். ஆகையால் ஒவ்வொருவரும் தங்கள் மக்களுக்குப் போதுமான கல்வியைக் கற்பித்தலே அவசியமாகும்.

* * * *

கண் தெரிகிற சிலரை நான் குருடரென்று அழைக்கிறேன். "என்? கண் தெரிகிறவர்களைக் குருடர் என்று அழைத்தால் அவர்களுக்குக் கோபம் வராதா?" என்று நீங்கள் கேட்கலாம், அதற்கு "கண்கள் இரண்டும் நன்றாகத்

தெரிந்தாலும் படிப்பில்லாதவர்கள் குருடர்களுக்குச் சமானம்" கண்ணுடைய ரென்போர் கற்றோர், முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர். என்று திருவள்ளுவர் கூறுகிறபடியால் படிப்பற்றவர்களைக் குருடர் என்கின்றேன். இதிற் பிழையொன்று மில்லையென்று இப்பொழுது நீங்கள் ஒப்புக்கொள்வீர்களல்லவா?

* * * *

நட்பு.

உலகத்தில் "தாமரை மலர்போல் பொலிந்த முகமும் கத்தரிக்கோலைப்போல் குரூர இருதயமும் வாய்ந்த மனிதர்கள் அநேகர் இருக்கின்றார்கள்." ஆகையால் எல்லோரையும் நம்பி அவர்களோடு கூடிக் கெட்டுப்போகாமல் யோக்கியர்களோடு கூடி யோக்கியர்களா யிருக்கப் பாடுபடுவதே உத்தமம்.

* * * *

இரகசியத்தில் மிகக் கொடியவர்களாகிய சிலர் வெளிக்கு அழகாகவும், நாணயமாகப் பேசுகிறவர்களாகவும் இருப்பார்கள். இரகசியத்தில் மிக நல்லவர்களாகிய சிலர் வெளிக்குக் கொடியவர்களாகவும் அந்தமற்றவர்களாகவும் காணப்படுவார்கள். எப்படி யெனில், விஷமுள்ள நல்ல பாம்பு அழகாயிருக்கிறது; விஷமில்லாத தண்ணீர்ப் பாம்பு அழகற்று விளங்குகிறதல்லவா? ஆகையால் எவரையும் ஆராய்ந்து அவரோடு சிநேகம் செய்யவேண்டும்.

* * * *

பத்தரைமாற்றுத் தங்கம் சிறிதளவு செம்போடு கலந்துவிட்டால் எப்படி உடனே மாற்று குறைந்து விடுகிறதோ, அப்படியே நல்ல யோக்கியர்கள் அயோக்கியர்களோடு கூடிவிட்டால் அந்த யோக்கியர்களையும் உலகத்தார் அயோக்கியர்களாகவே கருதுவார்கள்.

* * * *

ஒரு குளத்தில் தண்ணீர் வற்றியபோது அக்குளத்தை விட்டுப் போய்விடும் நீர்ப் பறவைகள். அப்படியே செல்வம் உள்ளபோது சிநேகித்து செல்வம் அழிந்தபோது சொல்லாமற் போய்விடுகிறவர்கள் சிநேகிதர்களாவார்களா?

* * * *

குளத்தில் தண்ணீர இருந்த காலத்தில் அத்தோடிருந்து, தண்ணீர் வரண்ட காலத்துத் தானும் கருகி, மறுபடியும் தண்ணீர் வந்த காலத்துச் செழித்தோங்கி வளர்ந்து எப்போதும் அக்குளத்தை விட்டு நீங்காமலிருக்கும் தாமரை, அல்லி முதலிய நீர்ப் பூண்டுகளைப்போல் வாழ்விலும் தாழ்விலும் நம்மை விட்டகலாத நிழல் போல் நம்மோடிருப்பவர்களே உற்ற சிநேகிதராவர்.

* * * *

ஒருவன் உடுத்திக்கொண்டிருந்த வஸ்திரம் அவனை யறியாமலே அவிழ்ந்துவிடுமானால் அவனுடைய கைகளானது எப்படி எச்சரிக்கையோடு அவ்வஸ்திரத்தை தளரவிடாமல் தடுக்கின்றதோ, அஃதேபோல் எவனொருவன் தனது சிநேகனுக்கு ஒரு இடுக்கண் வந்தகாலயில் அவன் தன்னை வேண்டாமலே தான் அவனுக்காகப் பரிந்து சென்று அவ் விடுக்கணினின்றும் அவனைக் காப்பாற்றுகின்றானோ அவன் தான் சிறந்த நண்பனாவன். அதைப்பற்றித்தான் உடுக்கை இழந்தவன் கைபோலாங்கே இடுக்கண் களைவதா நட்பு என்று ஒரு பெரியவர் கூறி இருக்கிறார்.

* * * *

மூன்று சிநேகிதர்கள் கூடி தீவாந்திரம் சென்று வேண்டிய திரவியங்களைச் சம்பாதித்துத் திரும்பி வரும் வழியில் ஒரு சத்திரத்தில் தங்கினார்கள். அவர்கள் மூவரில் ஒருவன் பருகுவதற்குத் தேத்தண்ணீர் வாங்கிவரக் கடைக்குச் சென்றான். அவன் தான் தேத்தண்ணீர் பருகியானபின் மற்ற இரண்டுபேருக்கும் தேத்தண்ணீர் வாங்கிக்கொண்டு திரும்புகையில் "இதில் கொஞ்சம் பாஷாணம் கலந்துவிட்டால் குடித்தவுடன் அவர்க ளிரண்டுபேரும் இறந்துபோய் விடுவார்கள்; பிறகு பணம் முழுவதையும் நாமே எடுத்துக்கொள்ளலாம்" எனக் கருதி கொஞ்சம் பாஷாணம் சம்பாதித்து அதிற் கலந்து கொண்டுபோனான். சத்திரத்திலிருந்தவர்கள் தேத்தண்ணீர் வாங்கப்போனவன் திரும்ப வந்தவுடன் அவனைக் கொன்றுவிட்டால் பணம் இரண்டு பாகமாகும்" என்றெண்ணிக்கொண்டிருக்கும்போது கடைக்குப்போனவனும் அங்கு வந்தான். உடனே அவ்விருவரும் அவனை அடித்துக் கொன்றுவிட்டு தாகம் அதிகமா யிருந்தபடியால் அவன் கொண்டுவந்த தேத்தண்ணீரைப் பருகி அதிற் கலக்கப்பட்டிருந்த பாஷாணத்தின் கொடுமையால் மடிந்தனர். இவர்கள் மூவரும் மாண்டது சிநேகிதத் துரோகத்தினால் அல்லவா?

ஆகையால் சிநேகத் துரோகம் செய்வது கொடுமையிலும் கொடுமை. இத்தகைய மனிதர்கள் இப்போதும் பலர் இருக்கின்றமையால் ஒவ்வொருவரையும் ஆராய்ந்தறிந்து அவர்களோடு நட்புக்கொள்ளல் வேண்டும்.

S. S. A.

(இன்னும் வரும்.)

THE LATE REV. FR. IGNATIUS S.J.

சேசுசபைக் குருவாகிய சங். ஜெ. இஞ்ஞாசியார் சுவாமிகளின் தேகவியோகம்.

வானத்தின் கண் துலங்கும் கோடானுகோடி வான்மீன்கள் நடுவில் ஓர் சந்திரன் தோன்றி பிரகாசிக்குந் தன்மைபோல் சகல வளங்களாலும் செழிப்புற்றோங்கும் தஞ்சைமாநகரத்தை யடுத்த கோட்டைக்காடென்னுமூரில் பக்தியுள்ள தாய் தந்தையர்களிடம் சங். ஜெ. இஞ்ஞாசியார் சுவாமியவர்கள் ஜனனமாகி, இளம் பிராயத்தில்தானே தேவதா பக்தியிலும் கல்வியிலுந் தேர்ச்சியடைந்து வருகையில் (Memento homo quia pulvus es et in pulverem reverteris) தூளா யிருக்கிற மனிதன் மீண்டும் தூளாய்ப்போவான் என்கிற ஆப்த வசனத்தை சிந்தையுற்று, உலகத்தை துறந்து, முன்னர் நாகபட்டணத்திலிருந்த சேசு சபை மடத்தில் 21-ம் பிராயத்தில் சேர்ந்து, கல்வி சாஸ்திரம் கற்று, சேசுசபை குருவாக அபிஷேகம் செய்யப்பட்டார்கள். குருப்பட்டம் பெற்றபின் பாளையங்கோட்டைக்கு அனுப்பப்பட்டதும், St. Francis Xavier's High School என்னும் ஓர் உயர்தர கலாசாலையை ஸ்தாபித்து, அதற்கு தாமே முதல் மானேஜராக சிறிதுகாலமிருந்தார்கள். அதன் பின், திருநெல்வேலி, பேட்டை, வீரவநல்லூர் சேர்மாதேவி, தென்காசி, சேர்ந்தமரம் முதலிய நூற்றுக்கணக்கான ஊர்களுக்கு பங்கு சுவாமியாராக நியமிக்கப்பட்டு, ஆங்காங்கு பல தேவாலயங்களையும் பள்ளிக்கூடங்களையும் கட்டி, பிராமணர், வேளாளர், முக்கியமாய் மரவர் முதலிய சாதியார்களில் ஆயிரக்கணக்கான பேர்களை சத்தியவேதத்தில் சேர்த்து வந்தார்கள். சொற்பகாலத்தில் தமது பங்கில் ஏராளமான கிறீஸ்தவர்கள் உண்டாகிவிட்டதால் தாம் பார்த்த ஒரே பங்கை 4 பங்குகளாக்கி, 3 பங்குகளை 3 சுவாமிமார்கள் வசம் ஒப்புவித்துவிட்டு, தமக்கு பிரதான வாசஸ்தலமாக விருந்த சேர்ந்தமரப் பங்கை தாம் வகித்துக்கொண்டுவந்தார்கள்.

இவர்கள் காலத்தில் பங்கில் உள்ள கிறீஸ்தவர்களுக்கு செய்த வைதீக, லௌகீக நன்மைகளை எல்லாம் இங்கு எழுதினால் விரிவாகுமாதலால், சில முக்கிய விஷயங்களை மாத்திரம் இங்கு எழுதுகிறேன். சேர்ந்தமரத்துக்கு பங்கு சுவாமியாராக வந்ததும், மாஜி ஜெமின்தார் வகையராக்களால் கிறீஸ்தவர்களுக்குண்டாகிய கஷ்ட நஷ்டங்களைக் கண்டு கஸ்தியுற்று, இந்த ஜெமினையும் அதைச் சேர்ந்த அநேக கிராமங்களையு மிஷியோனுக்கு சொந்தமாக்கி, நேர்த்தியான ஓர் பெரிய தேவாலயம், சிறுவர் சிறுமிகளுக்கு பாடசாலைகள், கன்னியாஸ்திரி மடம், சுவாமிமார்கள் வசிக்க பெரிய பங்களா முதலிய சிறந்த கட்டிடங்களையெல்லாம் கட்டி, ஒவ்வொரு திருநாளையும் விசேஷசிறப்புடன் நடத்தி, ஞான முயற்சிகளையடுத்த தியானங்களாலும், தமது அமிர்த பிரசங்கங்களாலும் கிறீஸ்தவர்கள் மனதில் உண்மையான தேவ பக்தியை யுண்டாக்கி, இவ்வூரிலிருந்த அநேகரை சன்னியாசிகளும் கன்னியாஸ்திரிகளும் ஆக அனுப்பினதுமன்றி, இக்கிராமங்களிலுள்ள கிறீஸ்துவர்கள், இந்துக்களின் சகல விவகாரங்களையும் தாமே விசாரித்து, யாதொரு பொருள் செலவு நேரிடாமலும், கஷ்ட நஷ்டங்களுண்டாகாமலு மிருக்கும்படி, நேர்மையான நியாயாதிபதியாக விருந்து இவ்வூர்வாசிகளின் நன்மைக்கான கல்வி, ஊர்சசீர்திருத்தம், வேதாபிவிருத்தி முதலிய நானாவித சத்விஷயங்களிலே தம் வாழ்நாளைச் செலவிட்டு, தனிமரமாகவும் யாதொரு உபயோகமில்லாமலுமிருந்த இவ்வூரை, நல்ல கனிகளைக் கொடுத்து குளிர்ந்த நிழலைத்தரும் மரங்களால் சூழ்ந்த சேர்ந்தமரமாகச் செய்தார்கள். இவ்வூராருக்கு வேண்டிய சகல நன்மைகளையுஞ் செய்தபின் தம் விருத்தாப்பிய தசைநெருங்கி வருவதையறிந்து கடைசியாக தாம் மேலுலகம் சேர வேண்டுமென்பதற்கு அத்தாக்ஷியாக, இவ்வூர்க்கு சமீபத்திலுள்ள ஓர் உயர்ந்த மலையின்மேல் தேவதாயார் பேரால் ஓர் சிறந்த தேவாலயமும் நல்ல ஊற்று ஜலமுள்ள ஓர் அழகிய தெப்பத்தையும் வெட்டி, அம்மலையை ஓர் திருயாத்திரை ஸ்தலமாகவுஞ் செய்தார்கள். வெய்யில், மழை, குளிர், வியாதி என்று பாராமல் 41 வருடகாலம் எங்க

ளோடிருந்து, இவ்வூரில் மூன்று தலைமுறை கண்ட மாதவரிஷி நிரம்பவும் தளர்ச்சியாகி, சற்று இளப்பாற பாளையங்கோட்டைக்கு சென்றார்.

அங்கு 10-மாத காலமிருந்து எவ்வித சிகிச்சை செய்தும் குணப்படாமல், படுக்கையி லிருக்கும் போது முதலாய்ச் சேர்ந்தமரத்திலிருந்து அடிக்கடி தம்மைப் பார்க்க வந்துகொண்டிருக்கும் நேசப்பிள்ளைகளைக் கண்டவுடனே, எழுந்திருந்து அவர்களுடன் தம் இனிய குரலால் பேசி, ஒவ்வொருவரையும் ஆசிர்வதித்தது மல்லாமல், அவர்கள் குணத்துக்கு ஏற்ற விதமாய் அவர்களை நடத்தத்தக்க ஓர் சற்குணம் வாய்ந்த குருப்பிரசாதியையும் தெரிந்தெடுத்து, தமது மரணத்திற்கு முன்னதாகவே இவ்வூருக்கு அனுப்பும்படி செய்தார்கள். ஆ! இங்ஙனம் எங்கள் நல்லமேய்ப்பனும் தாதையுமாயிருந்தவரும், சேர்ந்தமரத்துக்கு கிடைத்த ஓர் ஞான தீபமும், மதுரை மிஷியோனின் ஓர் பெலத்த தூணும், சூரியனைப்போல் பிரகாசித்துக் கொண்டு வந்தவருமான இம்மகானுக்கு வியாதி அதிகரித்து சென்ற 1917-ம் வருடம் டிசம்பர் மாதம் 24-ந் தேதி இரவு 6-மணிக்கு கிரிஸ்ட்மஸ் சுப வைபவத்திற்கு கொஞ்சம் முன்னதாக தம்மை சர்வேஸ்பரன் கையில் கையளித்து ஜீவனை விட்டார்களென்ற பிரலாபத்துக்குரிய துக்க செய்தியைக் கேட்டு, ஐயையோ! கண்ணீர் சிந்தி இங்கு அழாதவர் யாருமில்லை. 41-வருடங்களாக எங்களோடிருந்து உழைத்தது போதாது என்று இவ்வூர் மண்ணுக்கே தமது காயத்தையும் இரையாக்கசித்தமானதால் 25-ந் தேதி செவ்வாய்கிழமை சுவாமியவர்களின் திருமேனியை பாளையங்கோட்டையிலிருந்து வெகு பூச்சியமாக இங்கு கொண்டுவந்து, பந்தல்களாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட வீதிவழியாக குருக்கள், கன்னியாஸ்திரிமார்கள், கிறீஸ்துவர்கள் கையில் மெழுகுவர்த்தி ஏந்தி திருமேனிக்கு முன்செல்ல பெருந்தொகையான இந்துக்கள் பின்னால் புடைசூழ்ந்து சுற்றுப்பிரகாரமாக வந்து கண்ணாடிப் பெட்டிக்குள் கதிரவன் ஒளிபோல் பிரகாசித்துக் கொண்டிருந்த திருமுகத்தை எல்லாரும் தரிசனை செய்யும்படியாக செவ்வாய்க்கிழமை இரவு முழுவதும் கோவில் மண்டபத்தில் வைக்கப்பட்டு, மறுநாள் 26-தேதி புதன்கிழமை காலை 7-மணிக்கு துக்க பாட்டுப்பூசை செய்யப்பட்டு, இவ்வூர் கோவிலில் தெற்கு பீடத்தண்டை தமது பேர் கொண்ட அர்ச். இஞ்ஞாசியார் சுரூபத்துக்கு முன்னால் சங். இஞ்ஞாசியார் சுவாமி அவர்களின் திருச்சடலம் அடக்கஞ் செய்யப்பட்டது.

ஆண்டவரே, இவருக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும், முடிவில்லாத பிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக்கடவது.

இங்ஙனம் ஞானத்தந்தையை
Sendamaram, இழந்த
15—1—11. K. V. Francis Xavier.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

மிக்கேல் பாளையம்.

சங். பத்திராதிபரே,

கோயமுத்தூர் மேற்றிராசனத்தில் நகலூர் பங்கைச் சேர்ந்த சுமார் 200 புதுக் கிறீஸ்துவர்களடங்கிய மிக்கேல் பாளையம் என்னும் கிராமத்தில் சங். முத்துநாத சுவாமியாரவர்கள் ஷை ஊர் கிறீஸ்துவ சகோதரருடைய ஆத்ம ரட்சணியத்தைக் கருதி எடுத்துக்கொண்ட பெரு முயற்சியால், கோயமுத்தூரை யடுத்த சவேரியார் பாளையப் பங்கு சுவாமியாராகிய சங். மிக்கேல்நாத சுவாமிகளால் ஷை ஊர் கிறீஸ்துவர்களுக்கு கடந்த 1917ஆ டிசம்பர்மீ 18உ யிலிருந்து 21உ வரையில் மூன்றுநாள் ஞான வொடுக்கம் கொடுக்கப்பட்டது.

இவ்வூரில் ஞான வொடுக்கம் நடந்தேறியது இதுதான் முதல் தடவை. சங். மிக்கேல்நாத சுவாமிகள் தமது திறமையான வாய்ச்சாலகத்தினாலும், மதியூக மதுர மொழிகளாலும், விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகங்கள் வேரூன்ற வெகு சாமர்த்தியமாய் பிரசங்கித்து, மனமிளகாத கல் நெஞ்சத்தினர்முதலாய் மனமிளகி பக்தியிற் றலங்கச் செய்ததினால் அவ்வூரானைவரும் காலை மாலை தவறாமல் அம்மூன்று தினங்களில் ஞானவொடுக்க முறைகளைத் தவறாமல் அனுசரித்து கடைசி நாளில் ஏறக்குறைய 150 பேர் பாவசங்கீர்த்தனஞ் செய்து மறுநாள் 21உ வெள்ளிக்கிழமை திவ்யபலி பூசையில் எல்லோ

ரும் திவ்ய சற்பிரசாத நாதரை யருந்தி பூசைக்குப் பிறகு 'தேதேயும்' என்ற தேவதோத்திர சங்கீதமும்பாடி, இந்த ஞானவொடுக்கத்தை வெகு விமரிசையாய் முடிவுபெறச் செய்தார்கள்.

இப்புது கிறீஸ்துவர்கள் மேன்மேலும் பக்தியிற்றுலங்கி, புண்ணிய வழியில் சுறுசுறுப்பாய் நடக்க சர்வேசுரன் கிருபை செய்தருளும்படி வேண்டிக்கொள்வோமாக.

இவ்விசேஷித்த கிருபை இதுவரையில் இவ்வூருக்குக் கிடைத்ததில்லை. இதைப்பற்றி முதலாவது: இவ்வளவு மன உற்சாகத்தோடும், அன்போடும், அக்கரை விருப்பத்தோடும் இவ்வூராருக்கு நன்னெறியைப் போதித்து, தர்மவழியில் நடப்பதற்கான வழிப்பாடுகளைக் காட்டி, இந்த ஞான வொடுக்கத்தின் பலனால், எங்களிருதயங்களை மூடிக்கொண்டிருந்த அந்தகாரத்தை நீக்கிவிட்டு, தர்மவழியில் எங்களைக் கொண்டுவந்த எங்கள் அன்பார்ந்த பங்கு குருவாகிய சங். முத்துநாத சுவாமியா ரவர்களுக்கும், இரண்டாவது: தமது சுய அலுவலை எல்லாம் விட்டுவிட்டு, எங்கள் ஆத்தும இரட்சணியத்தை நாடி, வெகு தொலைதூரத்திலிருந்து எங்கள் மத்தியில் வந்து, ஞானவொடுக்கம் கொடுத்த சங். மிக்கேல்நாத சுவாமிகளுக்கும் இவ்வூராருடைய அன்பான நன்றியறிந்த தோத்திரங்களைச் செலுத்துகிறோம். இச் சற்குருக்கள் இன்னம் பல்லாண்டு சீவித்து, நல்லாயனைப் பின்சென்று, தங்களுக்கு ஒப்பிக்கப்பட்ட ஆடுகளாகிய ஆத்துமங்களைக் கடைத்தேறச் செய்வதில் அவர்கள் என்றும் அனுகூலமடையும்படியாகக் கடவுள் கருணைபுரிவாராக.

இத்தியான வொடுக்கத்தின் பலனை இவ்வூரார் அடைந்ததுபோல அயலநகலூர் பங்கினரும் அடையும்படி கடவுள் கிருபை செய்வாராக.

மிக்கேல் பர்னேயம், 8—1—18. இங்ஙனம், சி. தோமாஸ் கவுண்டர்.

25-ம் வருடாந்தரக் குருப்பட்டாபிஷேக ஜூபிலி.

இலங்கை அட்டன் மாநகரில் கண்டி மிஷன் O. S. B. சபையைச்சேர்ந்த அர்ச். சிலுவை கோவில் துணைப்பங்கு விசாரணைக் குருவாகிய கனம் "D. A. M. Chiorri" டீ. ஏ. எம். கியூரி சுவாமியார் அவர்களின் 25-ம் வருடாந்தர குருப்பட்டாபிஷேக ஜூபிலி, சென்ற டிசம்பர் மாதம் 27-ந் தேதியன்று மிக ஆரவாரத்துடன் கொண்டாடப்பட்டது. 27-ம்தேதியாகிய அன்று அதிகாலையில் சூரியன் தன் பொன்னிறக் கிரணங்களை எங்கும் இரம்மியமாய் வீசி அடித்தவண்ணமாய் இருந்தது. அன்று கோவிலில் செய்திருந்த சோடினைகளையும், பீடத்தில் சாற்றப்பட்டிருந்த பரிமளம் வீசும் பலவகையான நறுமணப் புஷ்பங்களையும், பனிமயமாய்த் துலங்கிய திருப்பீடத்தில் வைக்கப்பட்டிருந்த தங்க வருண கில்ட் இழைக்கப்பெற்ற அனேக தீபஸ்தம்பங்களில் எரியும் வர்த்திகளையும், அலங்கார வடிவமாய் அமைக்கப்பட்டிருந்த திருச்சிலுவையின் சுரூபம் மெய்யான ரூபமாய்க் காண்போருக்குண்டாக்கின திகைப்பையும் விவரித்துச்சொல்லமுடியாது.

இவ்வளவு சோடினைகளால் இரமணியமாய் அலங்கரிக்கப்பட்டிருந்த திருப்பீடத்தில் 6½-மணிக்கு ஓர் பூசையும் 8-மணிக்கு ஓர் பூசையும் நடைபெற்றன. பிறகு 10-மணிக்கு கனம் கியூரி சுவாமியார் அவர்களுடைய ஜூபிலி கொண்டாட்டத்திற்காக கண்டியிலிருந்து வந்திருந்த வந்திக்கத்தக்க கனம் பெக்மியர் ஆண்டவரவர்களும் இன்னும் சில குருப்பிரசாதிகளும் பீடத்தண்டையில் அமரவே, ஆர்மோனிய வாத்தியப் பெட்டியினின்று புறப்படும் மதுரம் பொருந்திய சுரத்துடன் சிறுவர்கள் சேர்ந்து இன்பத் தொனியுடன் பாட ஆரம்பிக்கவே, இரு குருப்பிரசாதிகள் துணைபுரிய, கனம் கியூரி சுவாமியார் நுட்பமாய் அமைக்கப்பட்ட பலவகைப் பூங்கொடியின் மத்தியில் பொன் இழையால் இழைக்கப்பெற்ற பெலிக்கான் பட்க்ஷி ரூபம் சித்திரிக்கப்பட்டிருந்த பூசை ஆயத்தத்தை அணிந்து, பொன் பாத்திரத்தைக் கையிலேந்தி, திருப்பீடத்தண்டை சென்று பெரிய பாடல் பூசையை ஆரம்பித்தார். பீடத்தில் விஜயம் செய்திருந்த குருப்பிரசாதிகளுக்குத் துணைபுரிய, சில சிறுவர்கள் அலங்கார உடுபாவனைகளைப் பூண்டு, கையில் மெழுகுவர்த்திகள், தூபம், தீர்த்த முதலியவைகளை ஏந்திய விதமாய் வந்து நின்றனர். அன்று பூசையில் அவ்விடத்திய சகல கிறீஸ்துவர்களும் சம்மனசுக்களின் அப்பமாகிய பரம திவ்ய நற்கருணையை மகா பக்தி வினயத்துடனும் உருக்கத்துடனும் உட்கொள்ளும் பாக்கியம் பெற்றார்கள். திவ்ய பூசை முடிந்தபின், தேதேயும், என்னும் கீர்த்தனைப் பாடலைப் பாடி, பரம திவ்ய நற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது. அதன்பின் சகலமான கிறீஸ்துவர்

களும் கனம் கியூரி சுவாமியார் அவர்களைச் சந்தித்தார்கள். கனம் கியூரி சுவாமியார் பல அர்ச்சியசிஷ்டவர்களுடைய படத்தின் பின்புறத்தில் தம்முடைய குருப்பட்டாபிஷேக நாளைக் குறித்துக்காட்டி அச்சிடப்பட்டிருந்த படங்களை கிறீஸ்துவர்களுக்குக் கொடுத்துச் சமர்ப்பித்தார்.

அன்று மாலை அத் தேவாலயத்தண்டை மிகவும் நேர்த்தியாய் அலங்கரிக்கப்பட்ட சிங்காரப் பந்தல் ஒன்றமைக்கப்பட்டிருந்தது. சுமார் 7½-மணி வேளையில் சகலமான கிறீஸ்துவர்களும், அனேக மகமமதியர்களும், புத்த வேதக்காரர்களும், இன்னும் அனேக புரட்டஸ்டாண்டாரும் ஏகமாய் வந்து கூடினார்கள். மணி எட்டடிக்கவே பிட்டில் முதலிய வாத்தியங்களுடனும், ஜாலர், மிருதங்கம் முதலியவற்றின் இன்ப சுரத்துடனும் மதுரம் பொருந்திய பாடல்களைப் பாட ஆரம்பித்தனர். பாடிக்கொண்டிருக்கும்போது சிங்காரப் பந்தலின் முன் திரைச்சீலை திறக்கப்பட்டது. அந்த நிமிடம் ஸ்ரீமான் J. H. M. Machado அவர்கள் விஜயஞ் செய்து, கனம் கியூரி சுவாமியார் அவர்களுக்கும் இன்னும் அங்கு கூடியிருந்த நேயர்களுக்கும் வந்தனோபசாரப் பத்திரம் தமிழிலும் ஆங்கிலத்திலும் வாசித்தனர். அதனபின ஓர் சிறிய டிராமா ஆரம்பித்தனர். அதன் வரலாறு: திவ்யபாலனின் பிறப்பையும், மூன்று இராஜாக்கள் திவ்யபாலனைத் தரிசனம் பண்ணப் போனதையும், வன்நரகில் வாழும் பேய்களுக்கெல்லாம் இராஜாவாகிய லூசிப்பேர் தன் இராஜாவான எரோதனுக்கு எதிரிடையாய் ஓர் குழந்தை பிறந்திருக்கிறதென்றும், அக் குழந்தையைச் சங்காரம் பண்ணவேண்டுமென்றும், அக்குழந்தை அகப்படாதே போனால் அங்குள்ள 40 நாளைக்குட்பட்ட சிசுக்களை எல்லாம் சங்காரம் பண்ணவேண்டுமென்றும் எரோது இராஜாவுக்குக் கற்பித்ததைப் பற்றியதேயாகும். இதை மிகக சாமர்த்தியமாய் நாடக ரூபத்தில் ஆடினார்கள். Mr. பியூஸ் பானாந்து லூசிப்பேய் வேடம் பூண்டு அங்கு கூடியிருந்தவர்களைப் பிரமிப்படையச செய்தார். வேடம்பூண்டு அதிசயிக்கச்செய்த Mr. பியூஸ் பர்னாந்துவுக்கு ஸ்ரீமான் ஜெபதிமிராந்தா அவர்கள் அச்சிங்காரப் பந்தலில் ஓர் பாக்கட் வாச்சை சங்கிலியுடன் பரிசளித்தார்கள். அதன்பின் "காட் சேவ் தி கிங God save the King" என்னும் மன்னர் வாழ்த்தைப்பாடி முடித்தனர். கனம் கியூரி சுவாமியார் துணைக்குருவாய் இங்கு வந்து 4, 5-வருடங்களே ஆகின்றன. இவர் வந்த இந்த சொற்ப நாளைக்குள் நம்முடைய வேதத்தைப் பரவச்செய்து பல பதிதரையும் அஞ்ஞானிகளையும் நமது ஞானமந்தையில் சேர்ப்பித்தருளினார். நமது கத்தோலிக்குமேய்ப்பராகிய இவருக்குக் கடவுள் தீர்க்க ஆயுளைத் தந்து பல்லாண்டுவாழக் கிருபை செய்யும்படி பரிவுடன் பிரார்த்திக்கின்றேன்.

அட்டன்,
15—1—18.

இப்படிக்கு.
B. F. Salase Dc. Pandiya.

கத்தோலிக்கு இந்திய சபை.

நிகழும் 1918ஆ ஜனவரி மாதம் சனிக்கிழமை 12-ம் திகதி மேற்சொல்லிய சபையின் ஸ்தாபகம் இவ்வப்பர் பர்மாவிலுள்ள மாண்டலே நகரில் உறுதிப்படுத்தப்பட்டது. மிக சங்கைக்குரிய F. M. Hervey குருசுவாமியாரவர்கள் விஜயஞ் செய்தனர். கூட்டம் 6-30-மணிக்கு துவக்கினது. கனம் L. A. Anthoobob அவர்கள், குரு சுவாமியார் ஆசனம வகிக்கும் பொருட்டு, அவர் கத்தோலிக்கருடைய ஆத்தும ஈடேற்றத்திற்காக எடுக்கும் ஊக்கததைபபற்றி, யும், விசேஷமாய் நம் இந்திய ஜனங்களின் முன்னேற்றத்தின் நிமித்தம் அவர்படும் அரும் பிரயாசையைப்பற்றியும் வெகு விமரிசையாயும் சுருக்கமாயும் எடுத்துரைத்து, கடைசியாக இப்படிப்பட்ட முக்கியமான கூட்டத்தில் அவர் அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்கும்படி பிரரேபித்தார். இதை அர்ச. சவேரியார் பள்ளிககூடத்து தலைமை உபாத்தியாயர், கனம் M. Paul என்பவர் தாங்கிப் பேசினார்.

குருசுவாமியவர்கள் அவர்களுடைய வேண்டுகோட்கிணங்க அக்கிராசனம் வகித்து, கத்தோலிக்கு இந்தியசபை அன்றையத்தினம் பகிரங்கமாய் ஸ்தாபிக்கப்பட்டதென்று கூறினார். சங்கத்தின் தலைவர் Dr. C. Lourdusawmy அவர்கள் எழுந்து, சங்கத்தின் விசேஷ கருத்தை எடுத்துரைத்து, விஜயஞ் செய்துள்ள சனவான்களின் ஒற்றுமை யென்னும் பற்றுதலும், உதவியும் இச்சபையின் அபிவிர்த்திக்கு அவசியம் வேண்டுமென்றுரைத்தார்.

அங்கத்திலொருவராகிய கனம் J. Arokiasawmy என்பவர் "சுவாதந்திரியத்தைப்" பற்றி வெகு நேர்த்தியான கருத்துகளடங்கிய ஓர் உபன்னியாசம் ஆங்கில பாஷையில் செய்தார்.

மற்றொருவர் கனம் A. Mariadoss உபாத்தியாயர் அவ்விஷயத்தைப் பற்றியே கூடியிருந்தவர்கள் ஆனந்திக்கும் பொருட்டு, ஓர் காலத்தில் ஏதோ துர் அதிஷ்டத்தினால் ஏழையான ஒருவன் "தன்கையே தனக்குதவி" என்னும் முதுமொழியை நன்குணர்ந்து விடா முயற்சியினால் தன் ஆதி அந்தஸ்தை யடைந்ததும் அதைக் கண்ட அவனுடைய சிநேகிதர் அவனிடம் மறுபடியும் வந்து சேரத் துணிந்தபோது:

"அற்ற குளத்தி னறுநீர்ப் பறைவைபோ
லுற்றுழித் தீர்வா ருறவல்லர்—அக்குளத்திற்
கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே
யொட்டி யுறுவா ருறவு" என்பதற் கிணங்க அவன் ஜாக்கிரதையாய் ஜீவித்தானென்னும் ஒரு சிறு மனோஹரமான கதையை ஆங்கில பாஷையில் சொல்லி முடித்தார். பின்னர் விஜயஞ் செய்துள்ளவர்களில் 7 பேர் இச்சபையில் அங்கங்களாயினர். அக்கிராசாஞதிபதி எழுந்து சங்கத்திலுள்ளவர்கள் ஒற்றுமையைக் கைப்பற்றி இச்சங்கத்தின் அபிவிர்த்திக்காக விடாமுயர்சியெடுத்துவரும்படியாக சில புத்திமதிகளைச் சொல்லிக் கூட்டத்தை முடித்தார்.

விஜயஞ்செய்தவர்களெல்லோரும் ஜாதிபேதமில்லாமல் ஒருமிக்க சிற்றுண்டியி லமர்ந்தனர். அதன்பின் சற்று நேரம் சங்கீதக் கச்சேரி நடத்தி கடைசியாய் "ராஜவாழ்த்தல்" பாடி, அன்றைய சாயங்காலத்தை சந்தோஷமாய் கழித்துச் சென்றனர்.

சர்வ வல்ல பிதா இச்சபை விர்த்தியாகிச் செழித்தோங்க கிருபாகடாட்சம் செய்வாராக.

கண்டுகளித்தோன்.

பரஞ்சோதி சமுத்திரமுமாய் தெவிட்டா அமுதமுமாய் இந்திரியங்களுக் கெட்டாதவருமாகிய சுவாமியினுடைய திருவடி யடையவேணுமானால் வான ஒளிதங்கி மனுக்குலத்துக்கு ருசிதட்டாமல் மங்கின விசுவாசத்தின் பாதையில் கெட்டியாய் நடக்கவேண்டும்.

உன் புத்திக்கடங்காத ஆனந்த சோதிப் பிரகாசத்தை நீ தழுவி யறிந்து அனுபோகம் பண்ண வேணுமானால் நீ யறியக்கூடாத காரியங்களை அறியவேணுமென்கிற ஆசையை விட்டு வேத முன்னைக் கொண்டுபோகும் பாதையில் தெய்வ அன்போடு கெட்டியாய் நடப்பாயாக.

—(அர்ச். சிலுவை அருளப்பர்.)

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாச்சாரம்.

ஜப்பான்.—இத்தேசத்தினால் முதல் முதல் அர்ச். பாப்பானவரிடம் அனுப்பப்பட்ட ஸ்தானாதிபதி உரோமாபுரி போய்ச் சேர்ந்துவிட்டதாகத் தெரியவருகிறது.

பிரிமேசன் சபை.—இச்சபைக்கு இத்தாலியா தேசத்தில் தலைவனாக இருந்து வந்த போலேரி என்பவன் சில தினங்களுக்கு முந்தி ஒரு சிறு கைத்துப்பாக்கியால் சுடப்பட்டானாம்.

சமாதானத்துக்காக பெரு முயற்சி.—இந்தப் பாழும் யுத்தம் ஒரு முடிவுக்கு வந்து, உலக முழுமையிலும் சமாதானமும் சந்தோஷமுமுண்டாக ஜெர்மனியிலுள்ள குருக்களெல்லாரும் பெரு முயற்சி எடுத்து வருகிறார்களெனத் தெரியவருகிறது.

ஸ்திரீகளின் தலை மயிர்.—ஜெர்மனியிலுள்ள மூனிச் பட்டணத்தில் 300 பவுன் நிறையுள்ள ஸ்திரீகளின் தலை மயிர் சேர்க்கப்பட்டதாம். நீர்மூழ்கி கப்பல்களென்று சொல்லப்படுகிற சப்மரைன்களுடைய யந்திரங்களுக்குத் தலை மயிர் உபயோகித்துக் கொள்ளப்படுகிறதாம்.

கிறீஸ்துவ சகோதரர் சபை (Christian Brothers).—இச்சன்னியாச சபையைச் சேர்ந்தவர்களிலும் ஏறக்குறைய 1,250 பேர் போர் முனைக்குச் சென்றிருக்கிறார்கள். 100 பேர் வரையிலும் பிரான்சு தேசத்துக்காக உயிர் கொடுத்திருக்கிறார்கள். 125 பேர் காயப்பட்டிருக்கிறார்கள். 75 பேர் வீரப்பட்டயம் பெற்றிருக்கிறார்கள்.

பத்துகோடி பவுன்.—கிரேட்பிரிட்டனிலுள்ள மதுபானச்சாலைகளை இராசாங்கத்தாரே விலைக்கு வாங்கி மதுபானம் அருந்தும் வழக்கத்தை கூடியவரையிலும் கொஞ்சம் கொஞ்சமாய் நிறுத்தப் பிரயாசப்பட வேண்டுமென்று உத்தேசித்திருக்கிறார்களாம். இதற்காக அவர்களுக்குப் பிடிக்கும் செலவு 10 கோடி பவுனாம்.

இந்தியாவும் ஐரோப்பிய யுத்தமும்.—ஐரோப்பிய யுத்தத்தின் நிமித்தம் இந்தியாவிலிருந்து மெசொபொடேமியா

வுக்கு 20 இந்திய கூலிப்பட்டாளங்களும், பிரான்சு தேசத்துக்கு 25 இந்திய கூலி பட்டாளங்களும் போயிருக்கின்றனவாம். தவிர 60-ஆயிரம் இந்திய தொழிலாளிக ளும், 20-ஆயிரம் பரிவாரங்களும் அன்னிய நாடுகளுக் கனுப்பப்பட் டிருக்கிறார்களாம்.

திருச்சபையின் அபிவிர்த்தி.—சென்ற சில மாதங்களுக்குள் அநேக புரோடஸ் டாண்டு கிறீஸ்துவர்களும் பாதிரிமார்க ளும் இங்கிலாந்தில் கத்தோலிக்குத் திருச் சபையிற் சேர பாக்கியம் பெற்றார்கள். இவர்களுக்குள் அநேகர் பிரபுக்களாயும் சாஸ்திரிகளாயு மிருக்கிறார்கள். இப்ப டியே மடகாஸ்காரில் ஓர் பெரியபிரபு தம் முடைய குடும்பத்துடன் கத்தோலிக்கரா னார். பாதிரியாயிருந்து திருச்சபையிற் சேர்ந்து குருப்பட்டத்துக்குப் படித்து சமீபத்தில் குருப்பட்டம் பெற்ற சங். டட்லி சுவாமியாரவர்கள், லண்டன் நக ருக்கருகில் வசித்துவந்த தம்முடையதாய் தந்தையரையும் சத்தியவேதத்தில் சேரும் படி செய்தார்.

யுத்தத்துக்குமுன் ஜப்பானிலும் சீன விலு மிருந்த குருக்கள்.—சேசு சபை குரு வாகிய சங். வேத்சுவாமியாரின் கணக்கின் படி யுத்தந் தொடங்குவதற்குமுன் ஜப் பான் தேசத்தில் 288 குருக்களிருந்தார்க ளென்றும் தற்போது அவர்களுக்குள் 60 பெயர் குறைந்திருக்கிறார்களென்றும், சீன தேசத்தில் 2,255 குருக்களிருந்தார் களென்றும் இப்போது 280 பேர் குறை வாயிருக்கிறார்க ளென்றுந் தெரிய வருகி றது. ஜப்பானில் சுதேச குருக்கள் 57 பெயரென்றும் சீனவில் 745 பேரென்றும் சொல்லப்படுகிறது.

ஜேர்மனியில் லுத்தர் வேதத்தாரால் பிரசுரிக்கப்படும் பத்திரிகையொன்று கூறு வதாவது.—"லுத்தரால் ஏற்படுத்தப்பட்ட புது வேதமுண்டாகி, தற்போது 400 வரு டங்களாகின்றன. இந்த அரிய சம்பவத் தின் 400-ம் வருஷ ஜுபிலியைக் கொண் டாட நிகழ்ந்துவரும் கொடிய யுத்தம் தடங்கலாயிருக்கிறது. இந்த யுத்தத்தால் புரோடஸ்டாண்டு மதத்துக்கு அநேக ஆபத்துக்களும் அசௌகரியங்களு முண் டாயிருக்கின்றன வென்று சொல்லத்தே வையில்லை. ஆனல் கத்தோலிக்கு வேதத் துக்குப் பலநன்மைகளும் சௌகரியங்களு முண்டாகி வருகின்றன. ஆனபடியால் இவ்வேதமே பிரபல்யமாய் பரவி, முன்னி லும் அதிகமாய்க் கீர்த்திபெற்று சிறந்து விளங்குமென்பது சகஜம்" என்பதேயாம்.

இந்திய காப்புச்சேனை.—தேசக்காப்பு விஷயமாய் இந்தியர்களையும் சம்பந்தப் படுத்துவதற்காக சேனையொன்று தயா ரிக்க வேண்டுமென்று கவர்ண்மென்டார் எண்ணினதின்பேரில், இந்திய காப்புச் சேனை அமைக்கப்பெற்று வருகிறது. சில மாதங்களாக இதில் சில இந்தியர்கள் சேர்ந்து இராணுவபயிற்சி செய்து வருகி றார்கள். இதில் திருச்சினாப்பள்ளியில் 125 பேர் பிராமணர்களும், 51 பேர் கிறீஸ்து வர்களும், 41 பேர் ஹிந்துக்களும் 14 பேர் நாயர்களும், 7 பேர் மகம்மதியரும், 5 பேர் தீயர்களும், மாப்பிள்ளைமார்களில் ஒரு வரும் சேர்ந்திருக்கிறார்களாம். இவர்களுக் குள் இராணுவபயிற்சியில் தேறினவர்க ளுக்கு அவ்விடத்தில் சர். சிவசாமி ஐயர் ஆதிபத்தியத்தில் சென்ற டிசம்பர்மீ 29-ந் தேதி யன்று பரிசுக ளளிக்கப்பட்டன. இன்னும் இதில் அநேகர் சேர எதிர்பார்க் கப்படுகிறது.

புதுவருட கௌரதா 'சின்னங்கள்.— இச்சின்னங்கள் அளிக்கப்பெற்றவர்களில் இரண்டு பெயர் குருக்களென்றும் இரண்டு பெயர் கன்னியர்களென்றும் அறிந்து சந் தோஷிக்கிறோம். மங்களூர் மேற்றிராச னத்தைச் சேர்ந்த நாரொல் எனும் ஊரில் சத்தியவேதப் பரம்புதலுக்காகவும், தாழ்ந்த வகுப்பாரின் முன்னேற்றத்திற் காகவும் உழைத்துவரும் குருவாகிய சங். கோர்ட்டி (சேசுசபை) சுவாமிகளுக்கும், ஹவராவிலுள்ள சிந்தாத்திரி மாதா வால யத்தின் விசாரணை குருவாகிய சங். டிவாச் சர் (சேசுசபை) சுவாமிகளுக்கும் காய் சர்-ஐ-ஹின்ட் வெள்ளி மெடல்கள் அளிக் கப்பட்டன. வங்காளத்திலுள்ள சங். ஜோசெபின் சகோதரிக்கு காய்சர் ஐ- ஹின்ட் தங்க மெடலும், ரங்கூனிலுள்ள சங். மார்கரெத் மரி சகோதரிக்கு காய்சர் ஐ-ஹின்ட் வெள்ளி மெடலு மளிக்கப்பட் டன.

உலகத்திலுள்ள மகா பெரிய சேசு சபை சர்வ கலாசாலை.—திருச்சினாப்பள்ளி

யிலுள்ள அர்ச். சூசையப்பர் கலாசாலையே உலகத்திலுள்ள சகல சேசுசபை சர்வ கலாசாலைகளிலும் மகா பெரிய சர்வ கலாசாலை யென்று பெயர் பெற்று விளங்குகிறது. இதில் வாசிக்கும் பெருந் தொகையான மாணுக்கர்களைப் பற்றியும், இதில் மிக்கத் திறமையுடன் கல்விகற்பிக்கும் தேர்ந்த சாஸ்திர நிபுணர்கள், உபாத்திமார்களைப் பற்றியும் இச்சர்வ கலாசாலைக்கு இவ்வளவு செல்வாக்குண்டா யிருக்கிறது. தற்போது இதில் வாசிக்கும் மாணுக்கர்கள் 2,328 பேராவார்கள். இன்னும் 500 பேருக்கதிகமானபேர் இடமின்மையின் நிமித்தம் கலாசாலையில் சேர்த்துக்கொள்ளப் படவில்லை. புரபெஸ்ஸர்களும் உபாத்திமார்களும் ஏறக்குறைய 100 பேரிருக்கிருர்கள்.

லூர்துநாயகியின் தரிசனை திருநாள் — இத்திருநாள் ஆரம்பாக்கத்தில் வழக்கம்போல் நாளது மீ 9உ கொடி யேற்றத்துடன் துவக்கமாகி, 17உ பெரிய பாடல் பூசை, பிரசங்கம், திவ்ய நற்கருணை ஆசீர்வாதத்துடன் முடிவுபெறும். சென்னை அதிமேற்றிராணியாராகிய மிகவும் வந்திக்கத்தக்க அருளப்ப ஆலன் ஆண்டவர் அவர்கள் திருவிழாவுக்கு விஜயஞ்செய்வார். கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களும் மற்றவர்களும் இந்தப் பொருத்தனைக் கோவிலைத்தரிசித்து, திருவிழாவைக் கொண்டாடி மோட்ச இராக்கினிமாதாவின் ஆசீரைப் பெற்றேகுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிருர்கள். ஆரம்பாக்கம் சென்னைக்கு 38 மைல் தூரத்தில் நார்த் ஈஸ்ட் ரெயில்வே லைனிலுள்ள ஓர் ரெயில் ஸ்டேஷன் ரெயில் சார்ஜ் அணு 8. திருயாத்திரை ஜனங்கள் தங்க ஓர் லோகல் பண்டு பங்களாவும் ஒரு சத்திரமுமுண்டு S. M. F.. Ignatius, விசாரணைக்குரு.

ஸ்டாக்கோம்.—இது ஸ்வீடன் தேசத்தின் தலை நகரமாகும். ஸ்வீடன் தேசம் யுத்தத்தில் தலையிட்டுக்கொள்ளாமல் நடுநிலைமையிலிருக்கும் தேசங்களில் ஒன்று. இதன் ஷை தலை நகரிலிருந்து வருங் கடிதங்களை வாசித்துப் பார்க்கையில், தற்போதய யுத்தத்தைப்பற்றி அதில்சேராத தேசங்களும் ஆகாராதிகள் குறைவால் மிக்கத் துன்பப்படுவதாக தெரியவருகிறது. இப்படிப்பட்ட கடிதமொன்றில் சொல்லப்பட்டிருக்கிறதாவது: எங்களுக்கு இவ்விடத்தில் சாதாரணமாய்க் கிடைக்கக்கூடிய வெள்ளை உரொட்டியைகண்ணுல் முதலாய் காண்பது அரிதாகிவிட்டது. ஆகையால் நாங்கள் களிப்பான சில கலப்பு வஸ்துக்களால் செய்யப்படுகிற ஓர் வித உரொட்டியை உண்டுவருகிறோம். அதைத் தொட்டால் கையில் ஒட்டுகிறது. பத்து நாளைக்கொருவிசையாகிலும் ஒருபலம் வெண்ணை கிடைக்காது. நிலக்கரி பஞ்சத்தால் மோட்டோர் வண்டிகள் ஓடுவதில்லை. பைசிக்கல் வண்டிகளை ரிப்பேர் செய்ய சாமான்களுங் கிடைப்பதில்லை. பட்டண முழுதுமே மாறிப் போயிற்று. உணவு பொருள்கள் அகப்படாததினுல் பஞ்சமுண்டாகி ஜனங்கள் துன்பப்படுகிருர்கள். ஒருவர் இன்னெருவர் வீட்டுக்குப்போஜன விஷயமாய் போக வர இருப்பதும் அசாத்தியமாய் விட்டது" என்பனவே அதில் சொல்லப்பட்டிருக்கிறது. யுத்தத்திற்சேராததேசங்களே இவ்வளவு கஷ்டப்படுகிறதென்றால் யுத்தத்திற் சேர்ந்திருக்கும் தேசங்கள் படுங்கஷ்டம் சொல்லத்தரமல்ல போலும். ஆகையால் கூடிய சீக்கிரத்தில் சமாதானமுண்டாகி சண்டை முடிவாகச் சர்வேசுரன் தயவு செய்யும்படி நாம் வேண்டிக் கொள்வோமாக

மனிதருக்குப்புதுமையாகத்தோன்றுவதெல்லாம் புதுமையாமோ?—பாரிட்பூர் என்னுமிடத்தில் ஒருதேவளமுண்டாம். அதற்கெதிரிலிருக்கும் பிரமாண்டமான மரமொன்று பொழுதுசாயும் நேரத்திலிருந்து மெள்ள மெள்ள கீழே சாய்வதும், மறுநாள் காலையில் சூரியோதயத்துக்கெல்லாம் மறுபடியும் நிமிர்ந்து தன் சுய நிலைமைக்கு வந்துவிடுவதுமாயிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. இதைக் கண்ணுறும் ஜனங்கள் ஆச்சரிய பிரமைகொள்வார்களென்பதற் கையமில்லை. ஆனபடியால், அவர்கள் தங்களுக்குள் இதோர் புதுமையென்றும், இம்மரமானது தனக்கெதிரிலிருக்கும் ஈஸ்வரியை இவ்வாறாக தொழுது நமஸ்கரிக்கின்றதென்றும் எண்ணி, அம்மரத்தண்டைக் கூட்டங் கூட்டமாய்ச் சென்று பொங்கல், பூஜை முதலிய பல அனுஷ்டானங்களைநிறைவேற்றி, பலவரங்

களையும் நன்மைகளையுங் கிடைக்கப்பெறுவதாகச்சொல்லிக்கொள்ளுகிறார்கள். இம் மரம் இராவேளையில் கீழே சாய்வதற்கும் பகல்நேரத்தில் நிமிர்ந்து நிற்பதற்கும் காரணமென்ன வென்றறிய, பௌதிக சாஸ்திரத்தில் தேர்ந்த நிபுணரென்று பெயர் பெற்றுவிளங்குகிறவரும், கல்கத்தா இராஜதானி சர்வ கலாசாலையில் போதனாசிரியருமாயிருக்கிற சர் போஸ் என்பவர் சில யந்திரங்களி னுதவியால் இதைப் பரிசோதனை செய்து பார்த்ததில், இதற்கு சீதோஷணமே, அதாவது குளிரும் வெப்பமுமே காரணமென்று அநேக ஆதாரங்களைக் கொண்டு நிரூபித்திருக்கிறாராம். ஆனபடியால் சுபாவ பலத்தினால் சம்பவிக்கும் சம்பவங்கள் புதுமைகளாகா வென்பதற்கு இதோர் நல்ல அத்தாட்சி. சுபாவ பலத்துக்கு மேலான தேவ பலத்தினால் நடைபெறும் சம்பவங்களையே நாம் புதுமைகளென்று நம்பவேண்டும். சர் போஸ் என்பவர் லூர்துமாதா தீர்த்தத்தினால் நடக்கும் புதுமைகளை மாத்திரம் பரிசோதனை செய்து பார்ப்பாரேயானால் அவைகளுக்கு விரோதமான நியாயங்களை நிரூபித்துக் காட்ட இயலாதவராய் அவைகளெல்லாம் மெய்யான புதுமைகளென்று ஒப்புக் கொள்வாரென்பது திண்ணம்.

விஷக்காற்று—நிகழும் கொரே யுத்தத்தில் ஜெர்மனியர் கிஞ்சிற்றும் ஈவு இரக்கமின்றி அநேகாநேககோரச்செயல்களைச் செய்து வருகிறார்களென்பது உலகமறிந்த விஷயம். இவ்வகைப்பட்ட செயல்களில் அவர்கள் விஷக்காற்று அடங்கியுள்ள குண்டுகளைப் பிரயோகிப்பதானது ஒன்றாகும். அவர்கள் இவ்விஷக்காற்றை ஓர்வித மூலிகையிலிருந்து உற்பத்தியாக்குவதாகச்சொல்லப்படுகிறது. இம்மூலிகை தென் அமெரிக்காவிலுள்ள வெனிஸுலா வெனும் மாகாணத்திற்கிடைக்கக் கூடியதாம். இது அல்லிக்கொடியைப் போல் படரும் ஒருவித செடியாம். இதன் இலை, பூ, காய், விதை முதலியவைகளெல்லாம் மகா காரமான வாசனை யுடையனவாம். ஒருவன் இச்செடியை நெருங்கிப் போகப் போக அவனுக்கு நெடியேறுவதுமல்லாமல், அவனுடைய கண்களிலிருந்து தண்ணீரும் பிரவாகமாய் ஓடிவர, அவனுடைய மூக்கு, தொண்டை, முகமெல்லாம் வீங்கி அவனுக்கு மரணமே வந்து நேர்ந்துவிடுமாம். இச்செடியினுடைய குணாகுணங்களையெல்லாம் கண்டறிந்திருந்த சில ஜெர்மனியர் நிகழும் யுத்தந் துவக்குவதற்கு முந்தியே இதன் ஐந்து வருஷத்திய விளைபொருள்களுக்கு முன் பணங்கொடுத்து வாங்கி தங்கள் தேசத்திற்குக் கொண்டு வந்து சேர்த்துக் கொண்டார்களாம். என்னே, ஜெர்மனியருக்குள்ள முன் யோசனை!

இந்தியா, இலங்கை.—இவ்விரு நாடுகளிலுமுள்ள கத்தோலிக்கரின் தொகை 22,79,000. குருக்களின் தொகை 2,963. இவர்களுக்குள் 1,000க்கு அதிகமானபேர் சுதேசக் குருக்கள்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ரூபாயும், முழுக்கலத்துக்கு 4-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

நன்மரண அறிக்கை

பழைய காயல் அழகைக்குரல் அல்லது ஸ்ரீமான் பொன்னையாப் பரனந்து விக்டோரியா அவர்களின் மரணபரிதாபம்.

சூரியன் தன் கிரணங்களை யடக்கிக் கொண்டு மேற்றிசையில் மறைவதுபோல் 1917-ம் வருடமானது தனது ஜீவியகாலத்தை ஒதுக்கிக்கொண்டு மறைந்து போனது. அப்பால் 1918-ம் வருஷம் தோன்றியது. எல்லோரும் ஆனந்தங் கொண்டாடும் தினமாகிய அன்று, பழைய காயல் ஊரவரும் புரூரவன் மக்கள் பலரும் துயரக்கடலில் அமிழ்ந்தினர். காரணம் "முன்னாள் பஞ்ச வழுதியர் ஆண்ட பழங் காயலைப்" புதிய காயலாக்க எண்ணிய ஸ்ரீமான் பொன்னையாப் பரனந்து அவர்களின் மரணமே. "புஷ்பித்த விருக்ஷம் காய்க்குமுன் மறைந்ததுபோல்" இளம் வயதுள்ள வாலிபனாகிய இவர் பழைய காயல் விஷயமாக எடுத்துக் கொண்ட பல நன் முயற்சிகள் பயன்தருமுன்,

காலஞ்சென்றனர். அவ்வூர் வாசகசாலை தபாற்சாலை, பாடசாலை, குளம், வயல், இவைகள் விஷயமாய் இவர்செலுத்திய பரோபகாரம், அவ்வூர் உள்ளவரை கருஙகல்லில் தீட்டிய அக்ஷரம்போல் நிலைநிற்கு மென்பதில் ஐயமில்லை. இவர் மரணத்தைக் கேள்வியுற்ற காயலூர் வாசிகள் கன்றிழந்த பசுக்களைப்போல் வாடி நின்றனர். இவர் தனக்குண்டான திரேக அசௌக்கியத்தின் பொருட்டு,.........தம் கண்டி நகரைவிட்டு கொளும்பு ஜெனரல் ஆஸ்பத்திரிக்குச் சென்றனர். அங்கு சுகப்படாமல் வைத்தியர்களால் கைவிடப்பட்டு, இறுதித் தேவத்திரவிய அனுமானஙகளைச் சம்பூரணமாய்ப் பெற்று, சேசுவே, என்னும் திருநாமச் சப்தத்துடன் 31-12-17ல் இவ்வுலகை வெறுத்துப் பூரண தயாபரியாகிய தேவதாய் தந்த திவ்ய மகனின் பாதஞ்சேர்ந்தனர். இவரது சடலம் 1-1-18ல் மாலை 5-30 மணிக்குக் கொளும்பு புரக்கோட்டை அர்ச்சியசிஷ்ட பிலிப்பு நேரி முனிவரின் ஆலயத்தில் சங்கைக்குரிய பொவியர். சுவாமிகளாலும், பொரளை மைய்யவாடியில், சங்கைக்குரிய லிட்டன் சுவாமிகளாலும், மந்திரிக்கப்பெற்று, நல்லடக்கஞ் செய்யபபட்டது. இதை வாசிக்கும் நண்பர்கள் இவ்வாத்தும ரட்சண்ணியத்திற்காக. ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொளளப் பிராரதிக்கிறேன்.

M. P. Kulandaiswami Pillai,
20—1—18. Broadway, Madras

பெங்களூர்.

நண்பர்கள் யாவருக்கும் பட்சத்துடன் தோத்திரம் புரிந்து தெரிவிப்பது: எனது இளைய சகோதரனாகிய 64-வது பய்னீா பென்ஷன அவுல்தார் A. அடைக்கலம் பொன்னுசாமி தற்சமயம் ஜனரல் போஸ்ட் ஆபீசில பியோன் உத்தியோகம் செய்துகொண்டு இருக்கும்போது, தேவ சித்தத்தால் 30-ந் வ ஞாயிற்றுக்கிழமை காலை 6-மணி பூசைகண்டு, பினபு தனது உத்தியோகத்திற்கு சென்று அவ்விடத்தில் மார்வலி என்று சுமார் 9-மணிக்கு வீட்டிற்கு வந்து, குருஸ்வாமியாரை அழையுஙகள் என்று சொலலி, அவஸ்தைப் பூசுதல் முதலிய தேவத்திரவிய அனுமானஙகளைக் குறையறப்பெற்று, அர்ச. சூசையபபர் உதவியால் யாதொரு மரண வேதனையின்றி 11. A. M-மணிக்குள் "சேசுமரி சூசை என் ஆத்துமததை உஙகள் கையில் ஒப்புக்கொடுக்கிறேன." என்ற இனிய ஓசையுடன் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார். இவருடையசடலம் மறுநாள் 31-ந்வ திஙகட்கிழமை காலை அர்ச். காணிக்கைமாதா ஆலயத்தில் சஙு. இராஜரிஷி A. ருதிரோ குருஸ்வாமி அவர்களால மநதிரிக்கப்பெற்றுத் தனது பெற்றோாகளை அடக்கம செய்திருந்த கூளை கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. இதை வாசிக்கும் அன்பர்கள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ள வேண்டுமென்பதே தாழ்மையான எனது பிரார்த்தனை.

இங்ஙனம்,
பென்ஷன் அவுல்தார் அய்யாகண்ணு,
Bangalore.

திருச்சினுப்பள்ளி.

தரங்கம்பாடி வாசியும் பிறகு திருச்சினுப்பள்ளி அர்ச். அடைக்கலமாதா கோவிலருகில் வசித்துவந்தவருமான காலம் சென்ற ஜான் பிள்ளை அவர்களின் சிரேஷ்ட புத்திரியும், எனது அருமை மனைவியுமாகிய மரியசூசையம்மாள் பேராவை சேர்ந்த பாகான் சிராயிக்கு அருகிலுள்ள ஜின்செஙதோட்டத்தில் என்னுடன் சென்ற 7 வருஷகாலமாக அன்னியொன்னியமாய் ஜீவித்து வந்து, சுமார் மூன்று மாதகாலமாய் காயலாயிருக்து எவ்வித சிகிச்சை செய்தும் பயனில்லாமல் தனது பிரிய கணவன், சகோதரர், பிள்ளைகள் மற்ற பந்து மித்திரர்கள் யாவரும் பரிதபித்து நிற்கத் தனது 25-வது வயதில் நிகழும் 1917-ம ௵ நவம்பர் மாதம் 27-ந் தேதி செவ்வாய்கிழமை பகல் 1-மணிக்கு இம்மண்ணுலகை விட்டு விண்ணுலக பதவி யடைந்தனள. மறுதாள் புதன்கிழமை மாலை 5-மணிக்கு பாகான் சிராய் அர்ச. சூசையப்பர் ஆலயத்தின் தற்கால பஙகு விசாரணை குருவாகிய சஙகை இராஜரிஷி ஆவ சுவாமியார் அவர்களும் அவ்விடத்திய கத்தோலிக்கர் அனைவரும் புடைசூழ்ந்து வந்து பாடலுடன் பிரேதத்தை நல்லடக்கம செய்தோம.

இதனைக் கண்ணுறுக்கும் சகலரும் இவ்வாத்தும இளைப்பாற்றிககாக வேணடிக்கொள்ள பிரார்த்திக்கின்றேன். இங்ஙனம்,

Jin Seng Estate } நிற்பாக்கியமுள்ள
Bagan Serai } A. M. Joseph.

குந்தக்கல்.

1916 அக்டோபர் மாதம் 27 தேதி வெள்ளிக்கிழமை காலை 8-மணிக்கு குந்தக்கல் திம்மஞ்சர்லா தெருவில் எனது 5-வது குமாரன பிறந்து சத்தியவேத சாரபடி 8-ம் நாள ஷை ஊரில் அர்ச. அன்னம்மாள் ஆலயத்தில சஙகை பொருந்திய இராஜரிஷி ஸ்கிபபர் சுவாமியாரால் ஞானஸ்நானம் கொடுக்கப்பெற்று, அற்புத அந்தோனி ராஜரத்தினம் என்று நாமகாரண மிடப்பட்டு செல்வமாய் வளர்ந்து வருநாளையில் திடீரென பெஙகளூருக்குப் போக நேர்ந்தது. அந்த தருணத்தில ஷை குழந்தைக்கு தேக சௌக்கியமில்லாமல் இருக்க, நலிந்து அநேக மதலை மொழிகளைப் பேசத துவக்கிற்று. இவற்றையெலலாம் கண்ணுறக்கண்டு மகிழ்ந்து இருக்கும வேளையில், தறசெயலாய் இழுப்பு மாதிரியாகக கண்டு அநேக வைத்தியமுஞ் செய்து குணப்படாமல சஙகைக்குரிய ஜோசப் சுவாமியாரால் ஆசீர்வதிக்கப்

பட்டுப் பிறகு 1917ஆம் அக்டோபர்மீ 30உ கஷ்ட வாதைப்பட்டு 31உ புதன்கிழமை காலை 2 3/4-மணிக்கு கர்த்தருக்குள் நித்திரை யடைந்தான்.

இங்ஙனம்,

அருமை குமாரனைப் பறிகொடுத்த தந்தை ஜெ. ஜோசேப், தாய் அற்புதம்மாள். தோத்திரம்.

சேக்கின்றபாத். திருமல்கிரி.

மரித்தவர்களுக்காக வேண்டிக்கொள்வது பரிசுத்தமும் பிரயோசனமு முள்ள எண்ணம்.

(II. மக்காபே. 12—46).

எனது பிரிய தந்தை M. N. Billey, என்பவர் சுரத்தால் பீடிக்கப்பட்டு தனது பிரிய மனைவியையும் ஐந்து குமாரர்களையும், நான்கு குமாரத்திகளையும், அதில் இரண்டு குமாரர்களை படைக்களத்திலும், மற்றும் பிரிய இனபந்துக்களையும் பரதவிக்கவிட்டு, தனது 86-வது வயதில் 1917-வருஷம் நவம்பர் மாதம் 9-ந் தேதி வெள்ளிக்கிழமை பகல் 12-மணிக்கு தன் மக்கள் பேரப்பிள்ளைகள் இனபந்துக்கள் புடைசூழ, யாதோ ரற்ப மரணவேதனையுமின்றி தம் ஆத்துமத்தை நமது பரம பிதாவின் கரத்தில் ஒப்படைத்தார். அன்றையத்தினம் மாலை 5-மணிக்கு திருமலகிரி அர்ச். உத்தரிய மாதாவின் கல்லறையில் சகல பந்து மித்திரர்கள் புடைசூழ பூஸ்த்தாபகஞ் செய்யப்பட்டது. என் தந்தையின் ஆத்துமம நித்தியத்தி விளைப்பாற இதைக்காணும் கத்தோலிக்க சகோதரர்கள் தங்கள் கடன் ஜெபங்களில் நினைவுகூரப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்,

தந்தையை இழந்து பரிதவிக்கும் நான்காவது குமாரன், M. N. B. Anthony,
No. 10. I. G. H, Busrah,
M. E. F. D.

ஸ்ரீமதி. மரிய வியாகுலப் பேர்னூந்து அவர்களின் நன்மரண அறிக்கை.

முப்புவனமுந்தாங்கும் முழு முதற் கடவுளைப பூதலத்தோரின் இரக்ஷண்யப் பிணையாய்த் தந்துதவும் திவ்ய மாசற்ற மரியன்னையின் திருவடிக் கன்பு பூணும் மனத்தினளாய், தினமெலாம் அப்பரம ஆண்டவளின் கிருபா நோக்கத்தைத் தமது விசேஷ ஆதாரமாகக் கொண்டு சதா பூசிக்கும் குணசீலியாய, புன்னையூர், பரதகுலத்தவருள், விளங்கா நின்ற, எனது நேச பேததியார், மரிய வியாகுலப் பெர்னூந்து அவர்கள் கடந்த 1917ஆம் டிசம்பர்மீ 31-ந் உயன்று, தமது 72-வது வயதில் விஷ பேதியென்னுங் கொடிய நோயால் பீடிக்கப்பட்டு, எவ்வித அவுஷதங்களாலும் குணப்படாமல், கடைசித் தேவத்திரவிய அநுமானங்களைக் குறையறப்பெற்று, 'சேசு மரி சூசை' யெனுந் திருநாமங்களைப் பக்தியுடன் பன்முறை உச்சரித்து, தமது மரணப் படுக்கையைச் சூழ்ந்திருந்த, மக்கள் மருமக்களையும், பேரன் பேத்திமார்களையும், கருணையுடன் ஆசீர்வதித்து; "என் அரும் மக்களே, மரியாயின் தாசராயிருப்பதே. நம் குடும்ப ஆபரணமாகு" மென மதுரைமொழி யுரைத்து "வியாகுலம் நிறைந்த, மரியே! நின் ஆதரவில் என் ஆத்துமத்தை ஒப்படைக்கிறே" னென, வெகுபற்றுதலோடு உச்சரித்து; அமரிக்கையாய் உயிர் துறந்தனர். அந்தோ! இவ்வுத்தமியின், வாழ் நாட்களில், தமக்கும் தம் குடும்பத்தினருக்கும் வந்துற்றபுன்பாடுகளில், தளரா நம்பிக்கையுடன் "என்னை ஆட்கொண்ட மரியே, நின் வியாகுலங்களையும், சந்தோஷங்களையும் குறித்து என் மக்களையும், மக்கள்பெற்ற பிள்ளைகளையும், நின்கருணை மடிமீதிருத்தி, அன்புடன் ஆதரித்தாள் என் தாயே" என்று உருக்க நேசப் பற்றுதலோடும், பக்தி நிறைந்த மனதோடும், மன்றாடிப் பல தடவைகளில் சித்திபெற்று, அப்பரம ஆண்டவளைச் சதா ஸ்தௌத்யம் செய்யும் அவாவில் மூழ்கி யிருந்தனர். ஆகையால், இதனைக் கண்ணுறும் சகோதர, சகோதரிகளே! எல்லாம் வல்ல நல்ல கடவுள், இவ்வாற்றுமாவுக்கு, நித்திய இளைப்பாற்றியைக் கிருபை பாலித்தருளப் பிரார்த்திக்குமாறு, விநயமாய் வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

பேத்தியாரை யிழந்து பரதவிக்கும் பௌத்ரரி லொருவனுகிய,

அட்டன், 12—1—18. } தனிஸ்லாஸ் மச்சாது.

ரோஷாநகர மடத்தில் மோனிகா சகோதரியின் மரணம்.

இராயபுரத்து கன்னியர் சபையின் நவகன்னிகையான மோனிகா சகோதரி இராயபுரத்தில் மெத்த வியாதியாயிருந்ததால், இடமாற்றத்துக்காகவும், ஆகாய மாற்றத்துக்காகவும் ரோஷாநகரத்து கிளை மடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். ஆனல் அச்சகோதரியின் சீவியகால முடிவு அவ்விடத்தில் வர பரம தந்தை சித்தமானதால் சங். ச. ம. இன்ஞசிநாத சுவாமியாரால் கடைசி தேவத்திரவிய அனுமானங்களை மெத்த ஆசைப் பக்தியுடன் பெற்றுக்கொண்டு 1918ஆம் ஜனவரிமீ 18உ பாக்கியமான மரணமடைந்து, மறுநாள் மெத்த சிறப்பாய் அடக்கம் பண்ணப்பட்டார்கள்.

அர்ச். இன்ஞசியார் மடம், ரோஷாநகரம், 28—1—1918.

இப்படிக்கு, ஒரு சந்தாபி.

இரங்கூன்.

நிகழும் 1917ஆம் டிசம்பர்மீ 18உ செவ்வாய்க்கிழமை விடியற்காலை 2-மணிக்கு L. மனுவேல் குமாரத்தியும் எனது அருமை சகோதரியுமாகிய ஜெபமாலை உரோசம்மாள், பரலோகப் பிராப்தி அடைந்தனள்; அன்று மாலை 6-மணிக்கு கெமன்டைன் கத்தோலிக் கல்லறையில் சங். இராஜரிஷி J. B. மூர்லான் குருசுவாமியாரால் நல்லடக்கஞ் செய்யப்பட்டதை துயரத்துடன் தெரிவித்து அவளின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ள பிரார்த்திக்கின்றேன்.

வயது 20-வருஷ, 11மாத, 28-நாட்கள்.

இங்ஙனம்,

Rangoon,
20th Dec. 1917. } R. L. மனுவேல்,
Finl. Commissioner's Office.

THE FAMOUS VICOMA SPECIFIC MEDICINES

IN MEMORY OF THE LATE REVD. FR. HASS S. J.,

For Headache, Neuralgia, Cough, rheumatism, paralysis, etc. (External application only.) } **VICOMA BALM** per tin As. 10/-

Apply to:—

M. P. KULANDAISWAMI PILLAI,
2/74, Broadway, *Madras.*

AMERICAN ORIGINAL CHOLERA MIXTURE.
விஷபேதி.

இக்கொடிய ரோகமானது, உலகத்தின் பல பாகங்களில் சிற்சில காலங்களில் தோன்றி வருஷா வருஷம் அநேக ஆயிரக் கணக்காக ஜனங்களைக் கொள்ளைகொண்டு போகிறது.

இந்த கொடும் வியாதியானது நமது தேசத்திலே முதல் முதல் 1817-ம் வருடந்தான் தோன்றின தென்பது அநேகரின் கொள்கை. இது கால வித்தியாசத்தினாலும், சீதோஷ்ணம் மாறுதலாலும், துர்க்கந்தத்தாலும், அழுகின குப்பைக் கூழங்களின் அசுத்தக் காற்றினாலும், கெட்டுப்போன மச்சங்கள், மாமிசங்கள், அழுகிப்போன காய் கனிகள் நன்றாகப் பழுக்காத பழங்களைச் சாப்பிடுகிறதினாலும், அசுத்த ஜல பானம் பண்ணுவதினாலும், இன்னுமிவை போன்ற அசுத்த விஷக்காற்றினாலு முண்டாகிறது. விசேஷமாக இவ்வியாதி இராக்காலங்களில்தான் தோன்றுகிறபடியினால் இவ்வியாதிக்கு தக்க ஔஷதமாகிய "அமெரிக்கன் ஒரிஜனல் கால்ராமிக்சர்" ஒவ்வொரு வீடுகளிலும் முக்கியமாய் ஜனத்திரளுள்ள போர்டிங் ஸ்கூல்களிலும் அவசியமிருக்கவேண்டியது.

எத்தேசத்திலும் எக்காலத்திலும் எவ்விதப் பத்தியமுமின்றி உபயோகிக்கக் கூடியது. அஜீரணத்தாலாலுஞ்சரி, மற்று மெக்காரணத்தினாலுண்டான பேதிக்கும் இது மேலானது. எல்லாவித வயிற்றுப் போக்குக்கும் கைகண்ட ஔஷதம். இஃதோர் தேர்ந்த அமெரிக்கன் டாக்டர் நெடுங்கால ஆராய்ச்சியினால் அனுபோகப்பட்டுச் செய்த அருமையான முறை. ஒரேதடவை உபயோகித்து இதின் குணத்தை நீங்களே அறிந்து கொள்ளுவீர்கள், தூரதேசஞ்செல்லும் பிரயாணிகளின் கையிருப்பாக கட்டாயமிருக்கவேண்டிய ஔஷதமிதுதான். புட்டி ஒன்றுக்கு அணா 12.

அமெரிக்கன் ஒரிஜனல் கம்பெனி,
41. துளசிங்கன் நாய்க்கன் தெரு, புதுப்பேட்டை, மதிராஸ்.

அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மவுன்ட்ரோட், "நேப்பியர்" சிங்காரத்தோட்டத்தருகாமையில் அர்ச். அந்தோனியார் பேரால் அவருடைய பக்தர்களின் உதவியைக்கொண்டு நாம் கட்டிவந்த ஷை கோவில் ஒருவாறு முடிவாகி, சென்ற டிசம்பர்மீ 23உ மிகவும் சங்கைக்குரிய எமது அதிமேற்றிராணியாரால் மந்திரிக்கப்பெற்று அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று அவரால் அவ்வாலயத்தில் பெரிய பாடற்பூசை செய்யப்பட்டதென்று மிக்கச் சந்தோஷத்துடனும் வந்தனத்துடனும் இதனால் ஷை உபகாரிகள் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இத்துடன் கோவில் வேலை முடிந்து போய்விட்டதென்று நினையாதீர்கள். தெய்வ பணிவிடைக்கேற்ற பூசைப் பாத்திரங்கள்; பூசை வஸ்திரங்கள் முதலிய சாமான்கள் தேவையாயிருக்கின்றன. மேலும் பங்கு சுவாமியார் வசிக்க ஒரு சிறு வீடும் அவசியம். இவைகளுக்காக மதிப்பிடப்பட்டிருக்கிற தொகை குறைந்தது 2,000 ரூக்கு மேலாகும்—ஆகவே, நீங்கள் இதுகாறும் எமக்குக் கைகொடுத்து உதவினதுபோல இப்பவும் உதவி செய்வீர்களென்று நம்பியிருக்கும்.

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள
சங். அருள்ப்பநாத சுவாமிகள்.

இதுவரையிலும் வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	4,622 11 6
Mr. சி. ஆ. சந்தனசாமி பிள்ளை (கடிநல்வயல்.)	4 0 0
ஆக மொத்தம்,	4,626 11 6

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு சத்திரம்.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு ஒரு சத்திரம் தேவையென்பது நெடுநாளாய் அனுபவித்துவந்த குறை. வெளியூரிலிருந்து வரும் கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க இடமின்றி தவிக்கவேண்டியதாயிருப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம்.

இக்குறையை நிவர்த்திக்க மயிலாப்பூர் மேற்றிராணியாருடைய அநுமதியின்பேரில் சங். எல். எக்ஸ். பெர்நாந்திஸ் சுவாமிகளின் தலைமை வகித்து ஒரு கமிட்டி சென்னையி லேற்பட்டிருக்கிறது. இக் கமிட்டியாரால் சிறுகச் சிறுக இதுவரையில் சேகரித்திருப்பது ரூ. 1,140—15—0 இத்தொகையைக் கொண்டும், கமிட்டி மெம்பரில் ஒருவருடைய கடன் கொண்டும் ரூ. 1,400 க்கு ஒரு சிறு இடம் வாங்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு தக்க சிறு வீடாவது கட்டிமுடிக்க குறைந்தது ரூ. 5,000 ஆவது வேண்டும்.

இக்கருத்துக்காக கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்கள் தங்களால் கூடிய தொகையை அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி இப்பொதுநலக்காரியத்துக்கு உதவி புரிவார்களென கோரப்படுகிறது.

	ரூ.	அ.	பை.
எற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	1,268	15	0
பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகள் (ஜனவரிமீ த்துக்கு) ...	30	0	0
ஆக மொத்தம்	1,298	15	0

Rev. Fr. L. X. FERNANDEZ,
North Georgetown,
Madras, E.

மனோகரன்.

இது பெங்களூர் C. S. ஞானப்பிரகாசம் பிள்ளை யவர்கள் எழுதிய ஓர் அருமையான தமிழ் நாவல். இதில் குடும்பவாழ்க்கையின் போக்கும், பத்தினி தன் பத்தாவினிடத்தில் நடந்துகொள்ளும் நெறிமுறையும், குடும்ப சுகஜீவியஞ் செய்யவேண்டுமாயின் அறவே நீக்கத்தக்க கொடிய மதுமான பழக்கக் கஷ்ட நஷ்டங்களும், இத்தீய பழக்கத்தால் கதாநாயகனாகிய, மனோகரன் அனுபவித்த ஆத்தும சரீர ஆபத்துகளும் இத்தீயப்பழக்க விலக்கினால் அவனடைந்த பல நன்மைகளும், தெள்ளிய தமிழில் ஆடவர் பெண்டீர் சிறுவர் சிறுமியர் முதலிய அனைவரும் எளிதில் வாசிக்கத்தக்க சுலப நடையில் எழுதிச் சுத்தமாகப் பதிபிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்க வேண்டிக் குறைந்த விலை 4-அணா குறிக்கப்பட்டுளது. 4-அணா தபால் முத்திரையனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்,

விலாசம் :— C. S. ஞானப்பிரகாசம் பிள்ளை,
தலைமை உபாத்தியாயர்,
பிளாக்பள்ளி பெங்களூர்.

நோட்டீஸ்.

(1) முழு வர்ணப்படங்கள் :—(10″×8″, 17″×13″, 20″×16″) டசன் 1-க்கு ரூ 1—2—0, 2—10—0, 5—0—0.

(2) ஜெப புஸ்தகப் படங்கள் :—டசன் அணு 0—1—0. 100-க்கு ரூ 1—12—0.

(3) கழுத்தில் போடக்கூடிய அலுமீனும் சாதா சுரூபங்கள், உத்தரிய சுரூபங்கள் (சதுரம், வட்டம்) முதலானது டசன் அணு 0—6—0 முதல் ரூ 1—8—0 வரையிலும்.

(4) கருப்பு உத்தரியம் (உயர்ந்த சகலாத்தில்) குரோஸ் ஒன்றுக்கு ரூ 4—0—0. நீல உத்தரியம் (உயர்ந்த சகலாத்தில்) குரோஸ் ஒன்றுக்கு ரூ 6—0—0.

(5) பாடுபட்ட சுரூபங்கள் (பல வகையிலும்) ½″×6″ டசன் அணு 0—6—0 முதல் ரூ 6—0—0 வரையிலும்.

(6) ஜெபமாலைகள் :—மரக்கொட்டை டசன் ரூ 1—8—0 முதல் ரூ 1—12—0 வரையிலும். (தேங்காய்க்கொட்டை) ரூ 2—8—0 முதல் ரூ 6—0—0 வரையிலும். (போர்சலின்) ரூ 1—12—0 முதல் ரூ 3—0—0 வரையிலும். (எலும்பு மணி) ரூ 5—0—0 லும்.

இன்னுமற்ற சாமான்களும் விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. வேண்டியவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதினால் வி. பி. மூலமாய் அனுப்பப்படும்.

எ. புஷ்பம் அண்டு கோ.,

நெ. 37, ஆனந்தபுரம்,

திருச்சினாப்பள்ளி.

லாட்டரி விளம்பரம்.

200-பிரைஸ்கள்.

டிக்கட் விலை 4-அணுதான்.

1-வது பிரைஸ் 1000-ரூபாய்.

2-வது 500. 3-வது 300. இப்படியே 200 பேயர்களுக்கு பிரைஸ்கள் கிடைக்கும்.

வருகிற எப்பிரல் 8-ம் தேதியில் அநாத பிள்ளைகளின் லாட்டரி நடைபெறும். டிக்கட்டுகளுக்கு முன்பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளவும். 10-டிக்கட்டுக்கு ஒரு டிக்கட் இனும். 22-டிக்கட்டுள்ள ஒரு புஸ்தகம் விலை 5-ரூபாய். பிரைஸ் விழுந்தவர்களுக்கு உடனே தெரிவிக்கப்படும். வெளி தேசங்களிலுள்ளவர்கள் உடனே பணத்துடன் பெயர்கள் அனுப்பினால் டிக்கட்டுகள் அனுப்பப்படும்.

தேவையுள்ளவர்கள் அடியிற்கண்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளவும். டிக்கட் விற்பனை எப்பிரல் முதல் தேதியில் முடிவு பெறும்.

Address :—

M. M. THOMAS PILLAI,
Cath. Catechist,
Hosur, Remount Depot P.O.,
South India.

விலாசம் :—

M. M. தோமாஸ் பிள்ளை,
கத்தோலிக் உபதேசியார்,
ஒசூர், ரிமவுண்டிப்போ,
சவுத் இந்தியா.

குடியர்களை குணமாக்கும் அற்புத

"லிக்கோரின்." "Likkorin."

"லிக்கோரினை" எந்தப் பானத்திலும் கலந்து குடிகாரருக்கும் அபினி தின்போருக்கும் இரகசியமாகத் தெரியாமல் கொடுப்பதில் குடியையும் கள்ளையும் ஆயுளுள்ளளவும் விட்டுவிடுகிறார்கள். பரீட்சைக்கும் பயனுக்கும் உத்தரவாதம். நூற்றுக் கணக்கான நற்சாட்சிப் பத்திரம் பெற்றது. பத்தியமே கிடையாது. 25, 27, 30 வருஷ நெடுங்காலக் குடியருக்கு ஒரே புட்டி போதுமானது. யாதொரு கெடுதியும் செய்யாதது. 40-நாள் சாப்பிடக்கூடிய "லிக்கோரின்" புட்டி விலை ரூபா 3—0—0. தபால் கூலி முதல்யவை அணு 5, பிரத்தியேகம்.

ஆங்கிலோ இன்டியன் டிரக்ஸ் கம்பெனி,
ஈரோடு, தென் இந்தியா.
Anglo Indian Drugs Co.,
Erode, South India.

லீலியும் ரோசாவும்.

ஆதி திருச்சபையில் அஞ்ஞான மார்க்கத்திலிருந்து மனம் திரும்பின இரு செல்வமாதுசிரோன்மணிகளைப்பற்றிய சரிதை. 417-பக்கங்கள் அடங்கியது இப்புஸ்தகம். இஃது திருச்சினாப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலையில் பேர்பெற்று காலஞ்சென்ற பிரான்ஸிஸ் பில்லியர்டு சுவாமியார் அவர்களுடைய ஞாபகத்துக்காக, அவர்களுடைய கிறீஸ்துவ மாணாக்கர்களில் ஒருவரால் எழுதப்பட்டது. புஸ்தகம் வேண்டுவோர் மதுரை செண்ட் மேரிஸ் ஸ்கூல் உபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ சூசை கோவிந்தராவுக்காவது அல்லது நல்லாயன் அச்சியந்திரச்சாலை மானேஜருக்காவது எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். தபால்கூலி அன்னியில் இந்தியாவில் எந்த இடத்திற்கும் விலை 12 அணு. இதர நாடுகளுக்கு விலை ரூபாய் 1.

சூசை கோவிந்தராவ், ஏஜண்ட்,
மதுரை.

N. M. SAMI & Co.,

No. 44, Nomboolyar Street, Madras.

சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்)

பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!

இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்க்கு
100-ரூபாய் பரிசளிக்கப்படும்.

நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையில் இருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானிதமிழ் வைத்திய நிபுணர்ளால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. நாள்பட வைப்பதால் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாக்காலி, செய்யான், பாம்பு, எலி முதலிய விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் அடியோடு நீக்கக் கூடியது. எண்ணிறந்தோர் இதனுல் சுகமடைந்தது பிரத்தியட்ச அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவில்லை. இது இரண்டு வித மருந்துகளடங்கியது. உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப் படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு ரூ. 0 8 0

ஷை தபாற்கூலி 0 3 0 டஜன் 1-க்கு ரூ. 5 0 0

எக காலத்தில் 2-பாக்கெட் வாங்கினுல் தபாற்கூலி இனும்.

வர்த்தகர்களுக்கு 100-க்கு 25-கமிஷன்.

சிவப்பிரகாச பல்பொடி

இந்தசிவப்பிரகாச பல்பொடி மற்ற இதர பல்பொடிகளைப்போலிரா மல் அதிகசுகந்தமாயும் பல்வலி, பல்லில்சொத்தை, ஈர்வளர்ந்திருத்தல், வாய் ரணம், வாய்நாற்றம், பல்லாட்டம், முதலியவியாதிகளை சொஸ்தப்படுத்துவது மல்லாமல் பல் நன்ருய் துலங்கும்படிச் செய்யும் வாயிற்கு சதா கம கம வென்று பரிமளத்தைக் கொடுக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணு 2.

6 டப்பி விலை அணு 10.

வி. பி. தபாற்கூலி 1-முதல் 6-டப்பிவரை அணு 5.

கிருஷ்ண சஞ்சீவி.

தலைநோய். பாரிசவாய்வு, சுளுக்கு, புண்கள், காயங்கள், வீக்கங்கள். கொப்பளங்கள். கட்டிகள். இருமல். மூச்சடைப்பு. தேள்கொட்டின விஷம் இவைகளுக்குத் தேவதாப்பிரசாதம். நோய்கண்ட இடத்தில் இந்த கிருஷ்ண சஞ்சீவியை நன்ருய் இரண்டு மூன்று நிமிஷம் தேய்த்தால் உபாதை மாயமாக பறந்து ஓடிவிடும். இதற்கு சமமான மருந்து வேறே எதுவுங் கிடையாது. இளங் குழந்தைகளுக்குக் காணும் சைத்திய நோய்களுக்கு உபயோகிக்கலாம். ஆயிரக்கணக்காகச் செலவழிந்துகொண்டு வருகிறது. ஒவ்வொரு க்ருஹத்திலும், பிரதிபிரயாணிகள் கையிலும் இந்த கிருஷ்ண சஞ்சீவி இருந்தே தீரவேண்டும்.

இதன் விலை புட்டி 1-க்கு அணு 8.

டஜன் 1-க்கு ரூபா 5—0—0.

கண் மருந்து.

கண்நோய், கண்குத்தல், கூசல், நீர்வடிதல், மங்கல், அந்திமாலை. பீளைகட்டல். சதை வளர்ந்திருத்தல், கண்சிவப்பு, எரிச்சல். கண் இமைபுருவம் இவைகளில் வலி. கண் புகைச்சல் இவைகளை குணப்படுத்தும். மாணுக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் வெகு சிறந்த அவுஷதம். இதை உபயோகித்தால் கண்ணுடி போடவேண்டியதில்லை. புட்டி 1க்கு அணு 8.

எமது விலாசம்:— என். எம். சாமி அண்டு கம்பெனி,
நெ. 44, நம்புலையர் தெருவு, மதராஸ்.